Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

(C/720) Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 04 | புதன்கிழமை | (18.05.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 231



'மூக்குத்தி' மகளிர் மட்டும் (11)




மேலுமொரு பாலியல் குற்றச்சாட்டு (13)



விஜயவீர பிரபாகரன் பின்லேடன் கொலைகள் (14)

யாழ். மணிக்கூட்டு வீதியில்...



## யாழில் வெசாக் பண்டிகை

(ஊர்காவற்துறை)

யாழ்ப்பாணத்தில் வெசாக் பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

2600 ஆவது புத்த ஜெயந்தி தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் (15 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரசார ஆவணங்கள்

(கொழும்பு)

கனடாவுக்கு அனுப்பப்பட விருந்த, புலிகளின் பிரசாரப் புத்தங்கள் அடங்கிய கொள்கலன் ஒன்றை இலங்கை அதிகாரிகள் நேற்று கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்தியாவின் சென்னை துறைமுகத்திலிருந்து கொழும்புக்கூடாக (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு முதலமைச்சர் வீடு சுற்றிவளைத்து தேடுதல்



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் வீடு எந்தவித முன்னறிவிப்பும் இன்றி இராணுவ கொமாண்டோக்களால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டுள்ளதாக மட்டக்ககளப்பு செய்திகள் தெரிவித்தன.

இலங்கை சட்டப்படி முதலமைச்சர்களின் வீடு தேடுதல் நடத்தப்படல் வேண்டுமாயின் இராணுவத்தினர், பொலிஸாரின (15 ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகாலச் சட்டத்தை அகற்றுங்கள்

# இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டு வரும் மனித உரிமை மிறல்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கும் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தினை இரத்துச் செய்வதற்கும் இலங்கை அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தியா இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் ஐ.நா பாதுகாப்புச் சபையில் சீர்திருத்தம் அவசியம் என்பதனை இரு நாடுகளும்



ஏற்றுக்கொண்டுள்ளதாக நேற்று வெளியிடப்பட்டுள்ள இலங்கை - இந்திய கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள் உத்தியோகபூர்வவிஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய பிரதமர் மன்மோகன்சிங், நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளிவிவகார (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.வில் வெசாக் விழா; பூரிப்புடன் அமைச்சர் விமல்



நியூயோர்க்கில் நடைபெறும் 2600 சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொள்ளவதில் பெருமை அடைவதாக ஐ.நா. எதிர்ப்பாளரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபைக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட அமைச்சர் தற்போது இந்நிகழ்வுக்கு விஜயம் செய்துள்ளாரே என இன்னர்சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஐ.நா. சபை பிரதிநிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சவேந்திர சில்வாவின் மொழி பெயர்ப்பு உதவியுடன் இன்னர்சிற்றி பிரஸ் விமல் வீரவன்சவிடம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கை மிக்க பங்காளி இலங்கை; சாத்தியமான உதவிகள் வழங்கப்படும்

(கொழும்பு)

இந்தியாவின் நம்பிக்கை மிக்க பங்காளியாக எப்பொழுதும் இலங்கை உள்ளது. எனவே சாத்தியமான அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளோமென இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணாவை நேற்று சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையை நாம் எப்போதும் நம்பத்தகுந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாணத்திற்கு 75 புதிய சுகாதார நிலையங்கள்

(கொழும்பு)

வடமாகாணத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான இலவச சுகாதார சேவையை மேம்படுத்தவென புதிதாக 75 சமூக சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த சுகாதார நிலையங்களை நிர்மாண்ப்பதற்காக இருநூறு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த சமூக சுகாதார நிலையங்கள் முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிர்மாணிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இச்சுகாதார (15 ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலி



பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த போரில் பலியாகிப்போன மக்களுக்கு...

## மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# செம்பியன்பற்று மீன் சந்தைகள் வரிப்பணம் அறவீட்டில் இழுபறி

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உபஅலுவலகத்தின் எல்லைக் குட்பட்ட கரையோர பிரதேசத்திலுள்ள 3 மீன் சந்தைகளில் மீன் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகள் வரிப் பணத்தை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சந்தைக்கான குத்தகைக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய சந்தைகளுக்கான கேள்வி கடந்த வருட இறுதிப்பகுதியில் பருத்தித்துறை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி பல்கேள்விதாரர்கள் தமது கேள்விகளைச் சமர்ப்பித்து அதில் கூடிய தொகையைச் சமர்ப்பித்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு, பருத்தித்துறைப் பிரதேச செயலாளருடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

இதன் கீழ் வத்திராயன் மீன் சந்தை 75ஆயிரத்து 505 ரூபாவிற்கும், உடுத்துறை 51 ஆயிரத்து 400 ரூபாவிற்கும் ஆழியவளை மீன் சந்தை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவிற்கும் குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் இவ்வருடம் தை மாதம் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிவரை சந்தை வருமானத்தை அறவிடுவதற்குக் குத்தகைதாரருக்கு உரிமை இருந்தும் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடுவோர் கடந்த 4 மாதங்களாக தமக்கான வரிப்பணத்தைக் கட்டுவதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பலமுறை பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளருக்குக் கடிதம் மூலமும், நேரில் சென்றும் தெரிவித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தாம் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (38)

# வடமராட்சி கிழக்கில் விசேட உதவித்திட்டம்

## "சோஆ" நிறுவனம் நிதியுதவி

(குருநகர்)

'சோஆ' உதவி வழங்கும் நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூறினார்.

மலசல கூடங்கள் மற்றும் கிணறுகள், பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், உந்துருளிகள், கடற்தொழில் வாழ்வாதார உதவிகளென 90 இலட்சம் ரூபா பெறுமதி யான உதவிகள் வழங்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இவ்வருட தொடக்கத்தில் 'சோஆ' நிறுவன உதவிச் செயற் திட்டங்களை அமுல்செய்வதற்கான அனுமதியை ஜனாதிபதியின் விசேட செயலணி வழங்கியுள்ளது.

'சோஆ' நிறுவனம் செயற்படுத்தவுள்ள மேற்படியான செயற்திட்டங்களில், சில தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ்.திருலிங்கநாதன் தெரிவித்தார். (68)

# யாழ்.மறியல் வீட்டின் பாதுகாப்பு பலமடைகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலை சுற்றுமதில்களின் மீது கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் சிறைச்சாலையின் மதில்களின் உயரம் குறைவானதாக உள்ளன. இதனைப் பார்வையிட்ட யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயகக்க, மதில் மீது கம்பி வேலி அமைக்குமாறு பணித்ததற்கு அமையவே இவ்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றிவர அமைக்கப்பட்ட மதிலிற்கு மேலாக கம்பி வலை, முட்கம்பித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் சிறைச்சாலை கைதிகள் சட்டவிரோதமாகத் தப்பிச்செல்வது தடுக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# பட்டிமன்றம்

(சாவகச்சேரி

மீசாலை வெள்ளமாவடிப் பிள்ளையார் ஆலய பூங்காவனத்திருவிழா இன்று புதன் கிழமை இரவு நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்தின் சிறப்பு நிகழ்வாக யாழ்.பட்டிமன்றக் குழுவின் ஏற்பாட்டில், ஆடவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுபவர் தாயா? தாரமா? என்னும் தலைப்பில் சைவப் புலவர் பொ.சுகந்தன் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (11)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் வெசாக் அலங்காரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகச் சூழலில், வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் சிங்கள மாணவர்கள் வெசாக் பந்தல்கள் மற்றும் கூடுகளை அமைத்து பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள இராமநாதன் வீதிப் பகுதியை அலங்கரித்திருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், யாழ்.பல்கலைக் கழகத்தில் தமது கற்கை நெறியினைத் தொடரும் சிங்கள மாணவர்களால் இவ்வருடமே வெசாக் தினம் பெரியளவில் கொண்டாடப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, பல்கலைக் கழகச் சூழலில் வீதியால் பயணித்த பொதுமக்களுக்கு மாணவர்கள் சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பாணங்களையும் வழங்கினர். (26)

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாயிரத்து அறுநூறாவது புத்த ஜயந்தி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலை அலுவலர்கள் இன்று காலை 9 மணிக்கு இரத்த தானம் செய்யவுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் சிறைச்சாலைக்குச் சென்று குருதிக் கொடையினை ஏற்றுக் கொள்ளவுள்ளனர்.

# தீவகத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிரந்தரத் தீர்வு கிடைப்பது எப்போது?

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச பாடசாலைகளில் நிலவிவரும் துறை சார்ந்த ஆசிரியர் பாற்றாக் குறையினை நீக்கக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இயங்கி வரும் 15 பாடசாலைகளில் பல பாடசாலைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் போன்ற துறைசார்ந்த ஆசிரியர் பற்றாக் குறை நிலவுவதாக கடந்த 16ஆம் திகதி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கல்வியாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக் குறை தொடர்பாக உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் தெரிவிக்கும்போது, இப்பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேத்தில் 18 பாடசாலைகளில் 15 பாடசாலைகள் இயங்குவதாகவும், இவற்றில் 3437 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும், இப்பாடசாலைகளில் 166 ஆசிரியர்கள் கடமையாற்று வதாகவும் தெரிவித்த அவர், பொதுவாக நோக்கும் போது ஆசிரியர் பற்றாக்குறை இல்லை எனவும், சில பாடவிதானம், சார்ந்த ஆசிரியர் பற்றாக்குறையே நிலவுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அதி கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளுக்கு வருவதில், ஊக்குவிப்புப் படியினைக் கருத்தில் கொண்டு வருவதில் பின்னடிப்பதுடன், தற்போது நடைமுறையில் உள்ள கட்டாயம் பத்து வருடங்கள் ஒரே பாடசாலையில கடமையாற்றவேண்டும் என்ற நிபந்தனையினால் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய முடியாதநிலை காணப்படுவதாகத் தெரிவித்தார். (27)

# அரச நிறுவனங்கள் தனியார் துறையினருக்கு

செரமிக் கூட்டுத்தாபனம், றப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம், கந்தளாய் மற்றும் எம்பிலிப்பிட்டிய விலுள்ள இரு சீனித்தொழிற் சாலைகள் ஆகியவற்றை தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

10 பில்லியன் ரூபாவுக்கு மேல் பெறுமதியான சொத்துக்களைக் கொண்ட, நஷ்டத்தில் இயங்கும் இந்நிறுவனங்களை 30 வருடகால குத்தகைகக்கு வழங்கவும், சுமார் 1000 ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வில்லி கமகே தெரிவித்தார்.

இந்நிறுவனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் அடுத்த 3 அல்லது 4 மாதங்களில் பூர்த்தியாகும் என இவ்வமைச்சு நம்புவதாக அவர் கூறினார்.

# ஒத்திவைப்பு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று புதன் கிழமை நடைபெறவிருந்த முதியோர்களுக்கான பயிற்சி வகுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சமூகசேவைகள் உத்தியோகத்தர் ரி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (104)


STUDY IN UK (work permit)

உடனடியே...




- IELTS அவசியமற்ற இறுதி UK பயணம்
- முன் கட்டணம் எதுவும் இல்லாத ஒரு புதிய நடவடிக்கை After Visa Payment
- Course Fees மிகக் குறைந்த விலையில்
- Sponser வசதி மிகக் குறைந்த விலையிலும் நம்பத்தகுந்த வங்கி ஊடாக எடுக்கப்பட்ட ஆவணமும்
- சட்ட வல்லுநர்களால் ஆவணங்கள் சரிபார்த்துக் கொடுத்தல்
- UK இல் 15 கல்லூரிகளிலும் அதற்கு மேற்பட்ட கல்லூரிகளுடனான சட்ட ரீதியான தொடர்பு
- இறுதிச் சந்தர்ப்பத்திற்குரிய கோட்டாவை நழுவ விட்டுவிடாதீர்கள்

தொ.பே.இல - 0778337379, 0750608404 (C/730)



தேரேறும் ஸ்ரீஞானவைரவர் அருள் வேண்டி பிரார்த்திப்போம்



கந்தர்மடம், பழம்வீதி, ஸ்ரீஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் கடந்த 08.05.2011 முதல் அலங்கார உற்சவம் நடைபெற்றுவருகிறது. இன்று 18.05.2011 நடைபெறவுள்ள தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.



செந்தமிழ் கலைஞானி, வர்ணனைக் கலாநிதி
எம்.பி.அருளானந்தன்
ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி. (C/529)



ஞான வைரவர் அனுக்கிரகம் அனைவருக்கும் கிடைக்கட்டும்

கந்தர்மடம் பகுதியில் பல்லாண்டு காலம் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஞானவைரப் பெருமானது இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. எமக்கெல்லாம் காவல் தெய்வமாக விளங்கும் ஞானவைரவப் பெருமானது அனுக்கிரகங்கள் அனைத்து அடியவர்களுக்கும் என்றென்றும் கிடைக்கவேண்டும் என வைரவப் பெருமானைப் பிரார்த்தித்து எனது ஆசியை வழங்குகின்றேன்.

(C/528)

"லோகா சமஸ்தாசுசினோ பவந்து"
அலங்கார உற்சவ பிரதம குரு
சிவஸ்ரீ வை.இராஜேஸ்வரக் குருக்கள்
(முனீஸ்வரன் தேவஸ்தானம் சுப்பர்மடம்)

தொழில் செய்யாமல் சோம்பேறிகளாக வாழும் செல்வந்தர்களும், பொருள் தேடுவதிலும், அதைக் காப்பதிலும் மிதமிஞ்சிய கவலை செலுத்தும் செல்வந்தர்களும் ஜீரணசக்தி எப்போதும் மோசமாகவே இருக்கும். அவர்களுக்கு எதுவுமே ருசிக்காது.

-பாரதியன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கண்காணிப்பு அவசியம்

அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் பிரதேச செயலகங்கள் வாரியாக நடக்கின்றது.

இரண்டு நோக்கங்களைக் கொண்டதாக இந்தக் கூட்டங்கள் நடக்கின்றன.

அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு இனங்காணப்பட்ட பணிகளை துரிதமாகச் செய்வதும், புதிய அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தை இனங்காண்பதுமாகும்.

வடக்கின் வசந்தம், நெல்சிப், என்ரிப் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு, மாகாணசபையின் நிதி ஒதுக்கீடு, பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகள், நிதி ஒதுக்கீடுகள் என்றும், இந்தியா போன்ற பிற நாடுகளின் உதவிகளும் இதில் அடங்குகின்றன.

இதில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணியானது தேவைகளையும், பயனாளிகளை தெரிவு செய்வதும், உறுதி செய்வதுமாக இருக்கின்றது. இந்தப் பணிகளின் முழுமைக்கு அமைச்சர்களும், அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைமை வகிப்பவர்களாகவும், வழிநடத்துபவர்களாகவும் இருக்கின்றனர்.

இதற்குப் பிரதேச வாரியாக அனைத்து அதிகாரிகளும், திணைக்களங்களும், பாதுகாப்புப் பிரிவினரும் சமூக நலன் விரும்பிகளும் தமது ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

இத்தனை பெரிய ஏற்பாடுகளும், கட்டமைப்புகளும் இருந்தாலும் அபிவிருத்திப் பணிகள் எதிர்பார்க்கும் துரிதத்தில் நடைபெறுவதில்லை. இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய அதிகாரிகள், அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பதிலளிக்க முடியாமல் தடுமாறி நிற்பதைக் காண முடிகிறது.

ஏன் இந்த அசமந்தப் போக்கு? ஏன் இந்தக் கவலையீனம்? அரச உத்தியோகம், பதவிகள் வேண்டுமென விரும்புகின்ற இந்த அதிகாரிகள் அதை ஒரு மக்கள் சேவையாகவும், வாழ்விட நேசிப்பாகவும் ஏன் எண்ணிச் செயற்படுவதில்லை?

சில அதிகாரிகள் அர்ப்பணிப்போடு கடமை புரிந்தாலும் ஏனையோர் ஒத்துழைக்க மறுக்கின்ற துரதிஷ்டம் உள்ளதாக சேவை மனப்பான்மையுள்ள அதிகாரிகள் அங்கலாய்ப்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

அரசியல் வழிகாட்டல், தேவையான நிதி ஒதுக்கீடுகள், அரச வளங்கள் இருந்தும் அபிவிருத்தியின் பலனை மக்கள் அனுபவிக்க முடியாமைக்கு சில அரச அதிகாரிகளே காரணம் என்றால் அது மிகையாகாது.

ஒரு சில அதிகாரிகளினால் ஒட்டுமொத்தப் பேரின் முயற்சியும், அர்ப்பணிப்பும் பயனற்றதாகி விடுகின்றன. இத்தகைய அசிங்கம் தொடர அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடமளிக்கக்கூடாது என்பது பொதுமக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

அபிவித்திப் பணிகள் என்பது அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் மட்டும் விவாதிக்கப்படுகின்ற, பரிந்துரைக்கப்படுகின்ற விடயமாகி விடாமலிருக்க, அசமந்தப்போக்கிலான அதிகாரிகள் மீது உரிய கவனம் செலுத்தப்பட பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

பரிந்துரைக்கப்படுகின்ற ஒவ்வொரு திட்டத்தையும் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை கண்காணிக்க வேண்டும்.

எந்தக் காரணங்களுக்காகவும், எவரது கவலையீனங்களுக்காகவும், அழிந்த தேசத்தின் அபிவிருத்தியையும், யுத்த வடுக்களைச் சுமந்து வாழும் மக்களின் வளமான வாழ்வையும் விட்டுக்கொடுக்க முடியாது.

- ஆசிரியர் -

## தனியார் பேருந்து நடத்துநரின் தந்திரத்தால் வடமராட்சி நோக்கிப் பயணித்த பயணிகள் அந்தரம்

(வவுனியா)

வவுனியா தனியார் பேருந்து நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த பேருந்து திடீரென யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்ததன் காரணமாக அதில் பயணித்த வடமராட்சி பகுதிப் பயணிகள் பலர் கொடிகாமம் சந்தியில் இடைநடுவில் இறக்கப்பட்ட சம்பவமொன்று நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

இதன் காரணமாக நெல்லியடிப் பகுதியில் மரணவீட்டு நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பலர் இதனால் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இவர்கள் கொடிகாமம் பேருந்து நிலையத்தில் இருந்து தமது வடமராட்சியில் பயணத்தைத் தொடர்ந்ததாகத் தெரிய வருகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது- நேற்றுக்காலை 9 மணியளவில் வவுனியா தனியார் பேருந்து நிலையத்தில் இருந்து பருத்தித்துறை வரை வழிதடப் பலகையுடன் பயணிகளை ஏற்றிக்கொண்டு தனியார் பேருந்து பருத்தித்துறை நோக்கி நேற்றுப் புறப்பட்டது.

இப்பேருந்தில் தனது பயணத்தின்போது அதன் நடத்துனரால் தந்திரமாக யாழ்ப்பாணம் என்ற வழித்தடப் பலகை மாற்றப்பட்டுள்ளது.

இதை அறிந்த பயணிகள் தமது பயணத்தை தொடர்ந்தனர். கொடிகாமம் வந்ததும் வடமராட்சி செல்ல வேண்டிய பயணிகளை இங்கு இறக்கி விட்டு அந்தப் பேருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்ததாக பயணிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கிருந்த சிலரால் இவர்கள் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து வடமராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நடந்து கொண்ட தனியார் பேருந்தின் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பயணிகள் தமது ஆதங்கத்தை வெளியிட்டனர். (பா)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரால் மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தது

(முரசுமோட்டை

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயத்திற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரினால் குழாய் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாய் குடிநீர் வசதிகள் இல்லாத நிலையில் இப் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் இம்மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையை கருத்திற்கொண்டு, பாடசாலை நலன்விரும்பியும், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளருமான மாணிக்கவாசகர் குடிநீர்க் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துப் பாடசாலை நிர்வாகத்திடம் அண்மையில் கையளித்தார்.

இதனால் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிநீர் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (110)

## கிளிநொச்சியில் வெசாக் நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெசாக் நிகழ்வுகள் இன்று சிறப்பாக இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரால் கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானத்தில் பெரிய வெசாக் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி லும்பினி விகாரையிலும் விசேட வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், வெசாக் நிகழ்வுகளும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட இராணுவத்தினர் வெசாக் தினத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெசாக் நிகழ்வுகளால் அதிகளவான தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாபெரும் இந்தியக் கல்விக் கண்காட்சி யாழ். பொது நூலகத்தில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தில் இந்திய கல்விக் கண்காட்சி நேற்றுக் காலை வைபவ ரீதியாகத் திறந்த வைக்கப்பட்டுள்ளது. இக் கண்காட்சி நேற்றுக் காலை 9.00 மணி முதல் மாலை 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ். இந்திய துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.யோகேஸ் வரி பற்குணராசா, இந்தி கல்விக் கவுண் சிலின் தலைவர் திருமதி அஞ்சு பாணர்லி, வைததி யர் செக் சொலைமான் ஆகியோர் பிரதம அதிதி களாகக் கலந்து கொண்டனர். இந்தக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் திறந்துவைத்தார்.

இலங்கையிலுள்ள இத்திய உயர்ஸ்தாணிகராலயத்தின் ஆதரவுடன் இடம்பெற்றுவரும் இக்கண்காட்சி தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தியாவில் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் யாழ்ப்பாண மாணவ சமூகத்தினர் தமக்குத் தேவையான தகவல்களையும் உதவிகளையும் இக் கண்காட்சி மூலம் பெற்றுக் கொள்ளலாம் இலங்கையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள விரும்பும் இந்திய உயர் கல்வி நிலையங்களுக்கு உதவுவதும் இதன் மற்றுமொரு நோக்கமாகும். ஜனாதிபதி விருது பெற்ற நிறுவனமாகிய லங்கா எக்ஸிபிஷன் அன்ட் கொன்பரன்ஸ் சேர்விசஸ் இக் கண்காட்சிக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இது தனியொரு நாட்டினால் நடத்தப்படும் மிகப் பெரிய கல்விக் கண்காட்சியாகும் Edcil உடன் தொடர்பு கொண்டுள்ள பெருந்தொகையான இந்தியக் கல்வி நிலையங்களும், பல்கலைக்கழகங்களும் இதில் நேரடியாகப் பங்குபற்றுகின்றன.


கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தியின் சகல துறைகளிலும் உலகளாவிய அடிப்படையில் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்குரிய மூலவளங்களையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ள இ.சீ.ஐ.எல். 1981ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தினால் ஓர் அரச துறை நிறுவனமாகக் கூட்டிணைக்கப்பட்டது. அது இப்பொழுது தேசிய எல்லைகளைத் தாண்டி ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியங்களிலுள்ள வளர்முக நாடுகளுக்குச் சேவை வழங்குவதிலும் விசேட கவனத்தைச் செலுத்தி வருகிறது.

இ.சீ.ஐ.எல். அமைப்பு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக விளங்குவதால், இந்தியாவிலுள்ள பிரபல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு இலங்கை மாணவர்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுக்கும் சுமார் 50 கல்வி நிலையங்கள் கண்காட்சியில் நேரடியாகப் பங்குபற்றுவது மருத்துவம், பல் வைத்தியம், மருந்தியல், முகாமைத்துவம், விஞ்ஞானம், கலை வர்த்தகம், விவசாயம், ஆசிரியத் தொழில் துணை மருத்துவம், தாதித் தொழில், ஹொட்டேல் நிர்வாகம், ஆங்கில மொழி பொன்ற துறைகளில் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி அல்லது கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் இலங்கை மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பாகும்.

நீண்ட காலமாகவே அநேகமான இலங்கை மாணவர்கள் தமது உயர் கல்விக்கு இந்தியாவை நாடிவருகிறனர். அருகிலுள்ள நாடு, உலகப்புகழ் பெற்ற கல்வி நிலையங்கள் தரமான கல்வி, பல்வேறு வகையான கற்கை நெறிகள், வசதியான கட்டடணங்கள், நட்புறவான சூழ்நிலை எனபனவே மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் கவரும் காரணங்களாகும். இந்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தரமுயர்ந்த கல்வி நிலையங்களினால் மருத்துவம், பொறியியல், கலை கட்டடக்கலை, வியாபாரம், சமூகசேவை, வணிகம், திட்டமிடல், முகாமைத்துவம், பத்திரிகைத் தொழில் போன்ற பல்வேறு துறைகளில் வழங்கப்படும் பல்வேறு மட்டங்களிலான கற்கை நெறிகளைப் பற்றி நேரடியாக அறிந்துகொள்ள இலங்கை மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோருக்கும் இ.சீ.ஐ.எல். இந்திய கல்விக் கண்காட்சி 2011 ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்கள் புறக்கணிக்கப்படுவதை ஈ.பி.டி.பி. ஒருபோதும் அனுமதிக்க மாட்டாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



பாதிக்கப்பட்ட மக்கள் உதவித்திட்டங்களின் போது புறக்கணிக்கப்படுவதனையோ அல்லது அபிவிருத்தியின் போது பிரதேசங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் கடைப்பிடிக்கப்படுவதனையோ, எமது கட்சியானது அதனை என்றும் அனுமதிக்காது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கனகபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: இம் மாவட்டமானது முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட மாவட்டமாகும் எனவே அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போதும் சரி, மக்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்களின் போதும் சரி நியாயமான ஏற்றத்தாழ்வுகள் அற்றவள ஒதுக்கீடுகளை மேற்கொண்டு எல்லாப் பிரதேசங்களையும் அபிவிருத்தியடையச் செய்யவேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டே, நாம் செயற்பட்டு வருகின்றோம் அந்தவகையில் அதற்கான ஒத்துழைப்பை நாம் அனைத்து தரப்பி னரிடமும் எதிர்பார்க்கின்றோம்,


மக்களின் பிரச்சினைகள் தேவைகள் என்பன மீள்குடியேற்றத்தின் பின்பு இன்று வரை எவ்வாறு தீர்க்கப்பட்டு வந்ததோ, அவ்வாறே எதிர்காலத்திலும் படிப்படியாக தீர்க்கப்பட்டு நிறைவான ஒரு அபிவிருத்திச செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்வோம் அதற்கு மக்களும் தங்களுடைய ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்

இதன்போது மக்கள் தங்களுடைய பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது அதனை உடனடியாகவே வருகை தந்திருந்த உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசென்று, அவர்களின் மூலமே தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தார்

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களினால் ஒருதொகுதி ரீசேட்டுகள் கையளிக்கப்பட்டன.இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன் ஈபிடிபியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் விவசாய கமநலசேவைத்திணைக்கள உத்தியோகத்தர்கள், மின்சார சபை பொறியியலாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளர், கிராம அலுவலர் மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# "வேரூன்றி விழுது பரப்பும் ஆலமரம்" நூல் வெளியீட்டு விழா சனியன்று

(யாழ்ப்பாணம்)



அளவெட்டி மகாஜன சபையினால் வெளியிடப்படும் அமரத்தும் அடைந்த பண்டிதர் க. நாகலிங்கத்தின் பிரதான தொகுப்பில் உருவான 'வேரூன்றி விழுது பரப்பும் ஆலமரம்' வரலாற்று தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அளவெட்டி கிராமத்தின் வரலாறுகள் பற்றியும் அங்குள்ள ஆலயங்களின் வரலாறுகளையும் தாங்கி ஒரு சிறப்பு நூலாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

அளவெட்டி கிராமத்தை சேர்ந்தவரும் தற்போது சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வரும் செல்லத்துரை சிவபாலனின் நிதி பங்களிப்புடன் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பண்டிதர் நாகலிங்கம் அமரத்துவம் அடைவதற்கு முன்னர் இந்நூலை வெளி யிடமுயன்றபோதிலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. அளவெட்டி கிராமத்தைச்சேர்ந்த திறமையாளர்கள் பலரது வாழ்வியற் தொகுப்பாக வரும் இந்நூல் பற்றிய விபரங்களை 0778449739 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என வெளியிட்டு சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக விஞ்ஞானப்போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய சமூக விஞ்ஞானப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 6,7 ஆம் தரங்களிற்கு காலை 9.30 மணிமுதல் 10 மணிவரையும், 8,9 தரங்களிற்கு காலை 10.15 மணிமுதல் 11.15 மணிவரையும், 10.11,12,13 ஆம் தரங்களிற்கும் காலை 11.30 மணிமுதல் 12.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகள் மற்றும் குடத்தனை அ.த.க. பாடசாலை, குடத்தனை றோ.க.த.க. பாடசாலை, மணற்காடு றோ.க.த.க. அம்பன் அ.மித.க. பாடசாலை குடத்தனை அ.மி.த.க. பாடசாலை, நாகர் கோவில் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு யாழ். வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் கரவெட்டி கோட்டப்பாடசாலைகளுக்கு யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாடசாலைகளுக்கு மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (109)

# உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்டப்போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப்பாடசாலைகளிற்கான (Do you Know) உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்டப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான வினாத்தாள் பொதி வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவுள்ளது. அதிபர்கள் இவ் வினாத்தாள் பொதியை 24ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று, போட்டிகளை நடத்தலாம் என வடமராட்சி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜயலட்சுமி சுகுமாரன் அறிவித்துள்ளார். (109)

# விசேட பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை காலை 9.00 மணிக்கு நிறுவனத்தின் பணிமனையில் நிறவனத் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள் ளது. அங்கத்துவம் வகிக்கும் சகல சங்கங்களையும் தவறாது உரிய நேரத்திற்கு சமூகமளித்து ஒத்துழைக் குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (109)

# செயலமர்வுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 9வரை புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (109)

□ □ □

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 3 இதில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இம்மாதம் 28,29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

28ஆம் திகதி காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை மொழிப்பாடமும், 29ஆம் திகதி காலை 8.30 மணிதொடக்கம் கணித பாடமும், யா/ புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வுக்கு சமூகமளிக்கும் ஆசிரியர்கள் இலவசப் பாடநூல் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆகிய வற்றைக்கொண்டுவருமாறும் கேட்டுள்ளார். (109)

□ □ □

வலிகாமம், கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர கலைத்துறைப் பிரிவில் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இரா ஜேந்திரன் அறிவித்துள்ளார். இக்கருத்தரங்கும் செயலமர்வும் யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியில், இந்த மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆசிரியர்கள் கருத்தரங்கிற்கு வரும் போது தரம் 13 இந்து நாகரிக பாட ஆசிரியர் கைந்நூலுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

# விளையாட்டுத்துறையில் பின்தங்கிய நிலை தற்போது முற்று முழுதாக மாறியுள்ளது

## கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் சிறிநிவாசன்

(பூநகரி)

கடந்த முப்பது ஆண்டுகளாக எமது பகுதி விளையாட்டு வீரர்களுக்கு போதிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை நவீன விளையாட்டு நுட்பங்களை பற்றிய பயிற்சிகள் கிடைக்கவில்லை அதனால் அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தமுடியாத அவல நிலை இருந்தது. இன்று அந்த நிலை முற்றாக மாறியுள்ளது. என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சிறிநிவாசன் தெரிவித்தார்.


பூநகரி பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார் தலைமையில் பூநகரி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,


நேற்றுமுன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்தா அளுத்கமே முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்று திரும்பும் போது, எமது மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த அவர், விளையாட்டுத்துறை தொடர்பாக கலந்துரையாடி அதன் குறைகளைக் கேட்டறிந்தார்.

எமது பகுதி விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யவும், விளையாட்டு வீரர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்துள்ளார்.

பூநகரி பிரதேச செயலக எல்லைக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிநாள் மெய்வல்லுநர் போட்டிகளில் 14 வீளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றியிருந்தன.

57 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தை பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகமும், 28 புள்ளிகளைப் பெற்று வலைப்பாடு ஜெய மீட்பர் வி.க. இரண்டாமிடத்தையும், 27புள்ளிகளைப் பெற்று முழங்காவில் விநாயகர் வி.க. மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டது இப்போட்டி நிகழ்வுகளில் 661ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேணல் டயாமல் ஜெயசூரியாவும், 662படையணியின் கட்டளைத்தளபதி லெப். கேணல் கருணரத்தினாவும், கேணல் பொன்னம்பெருமாவும் கலந்து சிறப்பித்ததோடு, வெற்றிக்கேடயங்களையும் வழங்கினர். (112)





அளவெட்டி கும்பிளாவழைப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர் உற்சவத்தின் போது பிள்ளையார் தனது பரிவாரமூர்த்திகளுடன் எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணிப்பதையும் காணலாம்.

# 2010 ஆம் ஆண்டிற்கான புதிய வாக்காளர் இடாப்பு மீள் பரிசீலனைக்கு ஏழாயிரம் விண்ணப்பங்கள்

## 3 நிராகரிப்பு, 6097 ஏற்பு - யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதம் 2010 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் டாப்பு யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் யாழ். உதவித் தேர்தல் அலுவலகத்தினால் பார்வைக்கு வைக்கப் பட்டமையைத் தொடர்ந்து அவை தொடர்பாக மீள் பரிசீலனைக்கு 7000 விண்ணப்பங்கள் தமக்கு அனுப்வி வைக்கப்பட்டதாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இவ் விண்ணப்பங்களில் மூன்றைத் தவிர ஏனையவை தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

2010 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் டாப்பு கடந்த தை மாதம் 3 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திலும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களிலும், உள்ளூராட்சி அலுவலகங்களிலும் மற்றும் தபாலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த வாக்காளர் கணக்கெடுப்பு நடைபெற்றபோது குறித்த விண்ணப்பதாரி அங்கு குடியிருக்காமை வெளிநாட்டிற்கு வேலை வாய்ப்புக்காக சென்றிருந்தமை, தடுப்பு முகாமில் சந்தேகத்தின் பேரில் கைதாகியிருந்தமை, இந்தியாவில் அகதிகளாக இருந்தமை போன்ற தேர்தல் ஆணையாளாரினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களில் 6097 விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக, மூன்று விண்ணப்பங்கள் தவிர்ந்த ஏனையவை தம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கிடைத்த ஒரு விண்ணப்பமும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு விண்ணப்பங்களும் அடங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (பா)

# துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மருதங்கேணியில் வீதிகள் புனரமைப்பு

**(வடமராட்சி கிழக்கு)**

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஐந்து வீதிகள் 50 கோடியே 5 லட்சத்து 8 ஆயிரத்து 993 ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.**

இதில் மருதங்கேணிப் பிள்ளையார் கோவில் வீதி (1005 மீற்றா -50 இலட்சத்து 43 ஆயிரத்து 425 ரூபா செலவிலும்), வாரி வட்டம் வீதி - I நாவலடியிலிருந்து மருதங்கேணி பாடசாலை வரையான வீதி (1800 மீ.தூரம் - 82 இலட்சத்து 25 ஆயிரத்து 449 ரூபா செல விலும்), வாரிவட்டம் வீதி II மருதங்கேணி பாடசாலையிலிருந்து உடுத்துறை மகா வித்தியாலயம் வரையான வீதி (1700 மீ.தூரம்) 66 இலட்சத்து 96 ஆயிரத்து 037. ரூபா 50 சதம் செலவிலும்), வாரிவட்டம் வீதி III விடிவெள்ளி வீதியிலிருந்து உடுத்துறை 3 ஆம் கட்டை சுமை தாங்கி வரையான வீதி (1800 மீ.தூரம்) 65 இலட்சத்து 23 ஆயிரத்து 800 ரூபா செலவிலும் புனரமைக்கப்பட வுள்ளதுடன், சுனாமி குடியிருப்பு வீதி (5500 மீ.தூரம்) 240 இலட்சத்து 20 ஆயிரத்து 282 ரூபா செலவிலும் புனரமைக்கப் படவுள்ளது.

இவ் வீதிகளில் மருதங்கேணிப் பிள்ளையார் கோவில் வீதி, சுனாமிக் குடியிருப்பு வீதி தவிர்ந்த ஏனைய வீதிகள் யாவும் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக் குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என ஒப்பந்தம் ஒன்று செய்யப் பட்டபோதும், இது வரை இந்த வீதிகள் திருத்தப் படவில்லை எனவும் தற்போது வதிகள் கல் மற்றும் கிரவல் கொணடு சீர்செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (38)

## பாலம் புனரமைப்பு

(வடமராட்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு கோணாவில் வீதியின் முதலாவது கிலோ மீற்றர் பகுதியிலுள்ள பழுதடைந்த பாலம் 17 இலட்சம் ரூபா செல வில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடு களை கிளிநொச்சி வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.ஜெய வீரசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பாலப்புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (100)

# மனிதாபிமான இராணுவ நடவடிக்கை இரண்டாம் வருட பூர்த்தி வைபவம்

(வவுனியா)

வன்னியில் மேற்கொள்ளப் பட்ட மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் வருட பூர்த்தி வெற்றி கொண்டாட்ட வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது என வடமாகாண ஆளுநர் அலுவலக சிரேஸ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆளுநர் அலுவலகம் இதனை ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில் மாகாண ஆளுநர், சிரேஸ்ட அதிகாரிகள், பாதுகாப்பு படையினர், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரத்தில் வவுனியாவிலுள்ள முக்கிய பாடசாலைகளில் வெசாக் அலங்கார கூடுகள் மற்றும் வளைவுகளை அமைக்குமாறு சிறந்த அலங்கார கூடுகளுக்கு பரிசில் வழங்கப் படும் என மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (39)

# தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான போட்டிகள்

(பருத்தித்துறை)

சுகாதார அமைச்சு எதிர்வரும் யூன் மாதத்தை அனை வருக்கும் சிறந்த போஷாக்கு உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுங்கள்' என்னும் தொனிப்பொருளில் போஷாக்கு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் கல்வி அமைச்சு மாணவர்களின் நடத்தை ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்தவும், அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் முகமாக மேற்படி தொனிப் பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களின் போஷாக் கினை நிர்ணயித்தல், கட்டுரைப் போட்டி, சுவரொட்டிப் போட்டி ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளிலும் 2, 5, 8, 12 ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் போசனை மட்டத்தை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் உதவியைப் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட தகவல்களின் சாரம்சத்தை யூன் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், வலயக்கல்வி அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட சாரம்ச அறிக்கையை யூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக் களத்துக்கும், கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷனை கிளைக்கும் அனுப்பவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளில் அரச பாடசாலைகளில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

இதில் தரம் 6 முதல் 9 வரை கனிஷ்ட பிரிவாகவும் தரம் 10 முதல் 13 வரை சிரேஷ்ட பிரிவாகவும் போட்டி நடைபெறவுள்ளதுடன், போட்டிக்காக அனுப்பப்படும் ஆக்கங்களின் பின் பக்கத்தில் பெயர், பாடசாலை, வகுப்பு விலாசம் என்பவற்றைக் குறிப்பிட்டு அதிபரினால் உறுதிப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆககங்களுக்கு பரிசில்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளது.

போட்டியாளர் ஆக்கங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிகக்கு முன்னர் ரேணுகா பீரிஸ், கல்விப் பணிப்பாளர், பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்குக் கிளை, கல்வி அமைச்சு என்னும் முகவரி இட்டு, கடித உறையின் இடது பக்க மேல மூலையில் போசனை மாதம், கட்டுரை, சித்திரப் போட்டி கனிஷ்ட - சிரேஸ்ட பிரிவு எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)




யாழ். பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற கல்விக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் திறந்து வைப்பதையும், அருகில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிற்பதையும், கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (கா)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(18.05.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
வைகாசி 04 ஆம் நாள்.
இராகுகாலம் 11.53–1.23, சுபநேரம் 4.23 –5.53,
நட்சத்திரம் அனுஷம் மு.இ. 6.33 வரை
திதி: பிரதமை பி.ப 3.52 வரை
வெசாக் மறுதினம் விடுமுறை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பண வரவு, தேக சுகம், நண்பர் தொல்லை, மனக் கவலை.

ரிஷபம்:- காரியத்தடை, மனக் கவலை, விபத்து வரும் கவனம்.

மிதுனம் :- பண வரவு, மன நிம்மதி, சிநேகிதர் உதவி.

கடகம்:- தேக சுகம், மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், கவலை.

சிம்மம்:- நண்பர் தொல்லை, ஆபத்து வரும் கவனம், வீண் பயம், மனச் சஞ்சலம்.

கன்னி :- காரியத்தடை, பணம் வரும், மன உளைச்சல், விபத்து வரக்கூடும்.

துலாம் :- நண்பர் வருகை, மூத்தோர் ஆசி, பணம் வரும், காரிய அனுகூலம், சோம்பல்.

விருச்சிகம்:- காரிய வெற்றி, பணம் வரும், நண்பர் உதவி, வீணான பயம்.

தனுசு:- பணக் கஷ்டம், வீண் செலவு, நண்பர் தொல்லை, காரியத் தடை, விபத்து.

மகரம்:- தேகாரோக்கியம், பண வரவு, கரிய வெற்றி, விபத்து வரும் கவனம்.

கும்பம் :- மூத்தோர் ஆசி, நண்பர் வருகை, பணக் கஷ்டம், ஆபத்து, கவலை.

மீனம்:- பணம் வரும், மன உளைச்சல், காரியத்தடை, நண்பர் தொல்லை, விபரத்து வரும் கவனம்.

## சர்வதேசத்தில் வலம் வரவுள்ளார்

(புதுடில்லி)

- பியுஸ் சாவ்லா சர்வதேச தரம்வாய்ந்த பந்து வீச்சாளார களில் ஒருவராக வலம் வருவார் என, பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: பஞ்சாப் அணிக்காக பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட பியுஸ் சாவ்லா, வெற்றிக்கு பெரிதும் உதவி வருகிறார். டில்லிக்கு எதிராக நடந்த போட்டியில் 3 விக்கெட் வீழ்த்தி ஆட்ட நாயகனாக தேர்வு பெற்றார். சர்வதேச தரவாய்ந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர் கடந்த போட்டியில் டில்லி வீரர்கள், களத்தடுப்பில் சிறப்பாகச் செயற் பாடமை யானது எங்களுக்குச் சாதகமாக அமைந்தது. இந்த வெற்றி அதிக தன்னம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. வரும் போட்டிகளிலும் பஞ்சாப் அணியின் வெற்றி தொடரும் என்றார்.

# அணியில் இல்லாதது ஏமாற்றம்



(மும்பை)

உலகக் கிண்ணத்தை இந்தியா வென்றதை நினைத்து மகிழ்ச்சியடைந்தாலும், அந்த அணியில் இடம்பெறாதது ஏமாற்றத்தை அளித்தது என்று இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா தெரிவித்தார்.

மும்பையில் இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: இந்தியா கிண்ணத்தை வென்றபோது மற்றவர்களைப் போல் நானும் உணர்ச்சி வசப்பட்டேன். 28 ஆண்டுகளுக்குப் பின்னர் கிண்ணத்தை வென்றது மிகப்பெரிய விடயம். ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் வாழ்க்கையிலும் உலகக் கிண்ணத்தை வெல்வது என்பது மிகப்பெரிய சாதனை. அந்த அணியில் இடம்பெறாததால் வருத்தமடைந்தேன்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் இடம் பெற்றது மகிழ்ச்சி. இந்திய அணியில் எனக்கான நிரந்தர இடத்தைப் பிடிப்பதற்கான நல்ல வாய்ப்பு இது.

முன்னணி பந்துவீச்சாளர்கள் சகீர்கான், நெஹ்ரா உள்ளிட்டோர் இடம்பெறாததால் எனக்கு கூடுதல் சுமை ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. முனாப் படேல் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடினார். வினய்குமார் சிறப்பாக விளையாடி வருகிறார் என்றார்.

## பார்வையற்றோர் கிரிக்கெட் போட்டி




பார்வையற்றவர்களுக்கான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பெங்களூரில் டிசம்பர் மூன்றாம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டி 14 நாட்கள் நடைபெறவுள்ளது. இந்த போட்டியில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், நேபாளம், மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து ஆகிய அணிகள் கலந்து கொள்கின்றன.

இப்போட்டிகளின்போது ரசிகர்களின் ஆதரவும், உற்சாகமும் இவர்களின் மன வலிமையை உறுதிமிக்கதாக ஆக்கிக்கொள்ள துணைபுரியும் என ஏற்பாட்டாளார்கள் தெரிவித்தனர்.

## 19 வயது கால்பந்தாட்டப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் சம்பியன்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலயங்களுக்கிடையில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் சம்பியனாகத் தெரிவானது.

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இறுதியில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையை எதிர்த்து பாலிநகர் மகாவித்தியாலய அணி மோதியது. இப்போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திற்கும், கதிர்காம வித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்றது. இதில் இரு அணிகளுமே கோல் எதனையும் போடாததால் சமனிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஒட்டுசுட்டான மகாவித்தியாலய அணியும், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் பேோட்டியில் இரு அணிகளும் தமக்குக் கிடைத்த கோல் போடும் சர்ந்தர்ப்பங்களை நழுவவிட்டபோதிலும், போட்டி ஆரம்பமாகி 12ஆவது நிமிடத்தில் கிடைத்த ஒரு சந்தர்ப்பதை ஒட்டுசுட்டான் முன்னணி வீரர்களால் இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் பாலிநகர் வித்தியாலயத்தை எதிர்த்து கதிர்காம வித்தியாலயம் மோதியது. இதில் இறுதி வரை இரு அணிகளும் கோல் போடாததால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 3-2 என்ற கோல் கணக்கில் கதிர்காம வித்தியாலய அணி வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (42)

## தேசிய மெய்வல்லுநர் போட்டி பஸ்துன்ரட்ட மைதானத்தில்!

(கொழும்பு)

16ஆவது உலக மெய்வல்லுனர் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடைபெறும் மெய்வல்லுநர் விளையாட்டு விழா எதிர்வரும் 21ஆம் திகதி களுத்துறை பஸ்துன்ரட்ட ஆசிரியர் கல்வி பீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது நாட்டின் சகல மாவட்டத்திலும் உள்ள மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் திறமையுடைய சகல வீர-வீராங்கனைகளும் பங்குபற்ற கூடிய வகையில் போட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் 16 மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட இரு பிரிவுகளாக நடைபெறுவதுடன் 22 வகையான மெய்வல்லுனர் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மேலும் அன்றைய தினத்தில் 11 மற்றும் 12 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகளும், நடைபெறவுள்ளன. இரு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டிகளின் போது களுத்துறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த 320 சிறுவர்கள் பங்கு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் வீர-விராங்கனைகளுக்கு பணப்பரிசு, சான்றிதழ், பரிசுப் பொருட்களுடன் போட்டிகளில் பங்குபற்றும் சகல வீர- வீராங்கனைகளுக்கும் உலக மெய்வல்லுனர் சம்மேளனத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீசோட் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிகள் பற்றிய ஊடகவியலாளர்களின் விசேட சந்திப்பின் போது, களுத்துறை மாவட்ட செயலாளர் கமல் பத்மசிறி கருத்து தெரிவிக்கும் போது, உலக மெய்வல்லுனர் சம்மேளனத்தின் தூர நோக்கிக்கு அமைவாக சிறுவர்களிடையே மெய்வல்லலுர் விளையாட்டுக்களை ஊக்குவிப்பதுடன் அவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தும் இத் திட்டத்திற்கு இம்முறை களுத்துறையைத் தேர்ந்தெக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் இப்பணி சிறப்புற நடைபெற ஊடகங்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளது.

கடந்த 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் வயது அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு: 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடம் ஹட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் மகாஜனாக் கல்லூரி. 15 வயதுப் பெண்கள் பிரிவில் முத லாமிடம் மெதடிஸ், இரண்டாமிடம் அளவெட்டி அருணோதயா, மூன்றாமிடம் வடமராட்சி இந்துக் கல்லூரி.

19 வயது ஆண்கள் பிரிவில்: முதலாமிடம் ஹட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் அளவெட்டி அருணோதயா, மூன்றாமிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

19 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாமிடம் யாழ். இந்து மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணிகள் பெற்றுக் கொண்டன.

இந்த மாவட்ட மட்ட சதுரங்கப் போட்டியில் பல முன்னணிப் பாடசாலைகள் கலந்து கொண்டதுடன், பல வீர, வீராங்கனைகளுக்கு பெரு ஊக்கமளித்ததாகவும் போட்டி ஏற்பாட் டாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி வரும் 21ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் போட்டியாளர்கள் அனைவரையும் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் கூட்டுறவு சபையின் 89ஆவது கூட்டுறவு விழாவை முன்னிட்டு அண்மையில் நடத்திய விளையாட்டுப் போட்டியில் பெண்கள் பலூன் உடைத்தல் போட்டியில் பங்குபற்றியதைக் காணலாம். இதன்போது பல உள்ளூர் விளையாட்டுக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (கா)

# பயிற்சிப் போட்டியில் இலங்கை வெற்றி



டில்சான்

(லண்டன்)

மிடில்செக்ஸ் அணியுடனான பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை அணி மிடில்செக்ஸ் அணியுடனான மூன்று நாள் பயிற்சிப் போட்டியில் விளையாடியது.

கடந்த 14ஆம் திகதி உக்ஸ்பிரிட்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மிடில்செக்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக ஆடிய மிடில்செக்ஸ் அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 360 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அன்ரு ஸ்ரோஸ் 151 ஓட்டங்களையும், டான் ஹவுசிகோ 104 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய இலங்கை அணி அதன் முதல் இனிங்சிற்காக விக்கெட் இழப்பின்றி 309 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அணித் தலைவர் டில்சான் 123, பரணவிதான 103 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தினர்.

51 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய மிடில்செக்ஸ் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரோஸ் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வெலகெதர மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 213 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சமரவீர 49 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் வெற்றி இலக்கை அணிக்கு நல்ல உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று விளையாட்டு விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இலகுவான காரியமல்ல

(லண்டன்)

உலகிலேயே சிறந்த டெஸ்ட் அணியென்றால் அது இங்கிலாந்து அணியையே சாரும். இவ்வாறு முதல்தரமாகவுள்ள அணியை வெற்றி கொள்வதென்பது இலகுவான காரியமல்ல என இலங்கை அணியின் பயிற்றுநர் ஸ்ருவர்ட் லோ தெரிவித்துள்ளார்.

கடந்த 18 மாதங்களாக இங்கிலாந்து அணி சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே, பயிற்சிப் போட்டியில் வென்றது போல் நாம் செயற்பட்டால் டெஸ்ட் தொடரிலும் வெல்வது சுலபம்.

உலகில் சிறந்த அணியொன்றுடன் இணைந்து பணியாற்றக் கிடைத்தமை சிறந்த வாய்ப்பாகும். இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் கொழும்பில் 45 டிகிரியிலேயே பந்தை வீசினர். ஆனால், அவர்களிடம் 10 டிகிரியில் பந்து வீசுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிரதான துடுப்பாட்ட வீரர்களான மஹேல மற்றும் சங்கக்கார இருவரும் பல காலமாக லண்டனில் விளையாடியுள்ளனர். எனவே, அவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது அவர்களுக்குத் தெரியும்.

லசித் மலிங்கவின் இடத்தை நிரப்பும் வகையில் நுவான் பிரதீப் (வயது - 24) செயற்படுவார். நாம் அணியில் இளைஞர் பட்டாளமொன்றை வைத்துள்ளோம். எனவே, இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை வெல்ல முயற்சிப்போமென அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி

(போர்ட்பென்னிங்ஸ்)

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச துப்பாக்கிச் சுடல் போட்டிகளில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீராங்கனை அன்னு ராஜ் சிங், லண்டனில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் .:.போர்ட் பென்னிங்ஸ் என்ற இடத்தில் உலக துப்பாக்கிச் சுடல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் சுடலில் கலந்துகொண்ட அன்னு ராஜ் சிங், 389 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

அதே அளவு புள்ளிகளுடன் இறுதிக்குத் தகுதி பெற்ற உக்ரைன் போட்டியாளர் ஓலீனா கோஸ்டீவிச் முதலிடத்தை வென்று தங்கப் பதக்கம் பெற்றார்.

## இங்கிலாந்து தொடருக்குத் தயார்

(மும்பை)

தோள்பட்டை காயத்துக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் இங்கிலாந்துடனான தொடரில் விளையாட முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் டில்லி அணியின் தலைவராக இருந்த சேவாக் தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்டார். தொடர்ந்து விளையாட முடியாத அளவுக்கு வலி அதிகமானதால், தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இந்நிலையில் லண்டனில் சில நாட்களுக்கு முன்னர் அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

சிகிச்சைக்குப் பின்னர் நாடு திரும்பிய சேவாக், இங்கிலாந்துடனான தொடரில் தன்னால் விளையாட முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்போது வலி வெகுவாகக் குறைந்துள்ளது. ஒன்றரை மாதத்துக்குப் பின்னர் மீண்டும் லண்டன் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளவுள்ளேன். அதன் பின்னர் முழு உடல் தகுதியுடன் விளையாடத் தயாராகிவிடுவேன். இங்கிலாந்து அணியுடனான தொடரில் விளையாட முடியும் என நம்புகின்றேன் என்றார்.

# நெருக்கடியைக் குறைத்தவர் கிறிஸ் கெய்ல்

(பெங்களூர்)

பெங்களூர் அணியின் நெருக்கடியைக் குறைத்தது கிறிஸ் கெய்லின் ஆட்டமே. இருப்பினும், அணியின் வெற்றி கிறிஸ் கெய்லினால் மட்டும்தான் பெற்றுக் கொள்ளப்பட்டதல்ல. அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடிய வீரர்களும் எமது அணியில் உள்ளனரென பெங்களூர் அணித் தலைவர் விராட் ஹோலி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அடுத்த சுற்றில் நெருக்கடி ஏற்படக் கூடாது என்பதற்காக புள்ளிகள் பட்டியலில் முதல் அல்லது இரண்டாவது இடத்தை பிடிப்பதே இலக்கு. ஒரு ஆட்டத்தில் மோசமாக ஆடினால் வாய்ப்பில் இருக்க முடியும். இதனால் முதல் இரண்டு இடம் என்பதே எங்கள் நோக்கமாக உள்ளது.

கிறிஸ் கெய்ல் சிறந்த அதிரடி வீரர். ஆனால் முழுக்க அவரை மட்டும் நம்பி அணி இல்லை. மற்ற போட்டியில் திரும்புமுனையை ஏற்படுத்திய, அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் வீரர்களும் அணியில் உள்ளனர். அதே நேரத்தில் கெய்ல் எங்களது நெருக்கடியை எல்லாம் குறைத்துவிட்டார் என்பதில் சந்தேகம் இல்லை. தொடர் வெற்றியில் நாஙகள் அதிக நம்பிக்கையுடன் இருக்க மாட்டோம்.

இத்தொடரில் கிண்ணத்தை வெல்லக்கூடிய அதிக வாய்ப்பு எங்களுக்கு இருக்கின்றது. அதனைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் எமது செயற்பாடுகள் ஒவ்வொரு போட்டியிலும் அமைந்தால் மட்டுமே அதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த வாய்ப்பு இருக்கின்றது என்பதை மனதில் கொண்டு ஆட நினைத்தால் இறுதியில் எதுவுமே மிஞ்சப்போவதில்லை.

அத்துடன் ஒவ்வொரு வீரர்களின் அர்ப்பணிப்பும் எல்லாப் போட்டிகளிலும் ஒரே மாதிரியாக இருக்காது. எனவே இவற்றை உணர்ந்து நாம் செயற்படவேண்டும்.

அடுத்து வரும் கடினமான பாதையை கவனமாக கடந்துசெல்லவே விரும்புகின்றோம் என்றார்.

# சிறந்த நிலையை அடையவில்லை

(சிலி)

மெஸ்சி மிகச்சிறந்த நிலையை அடையவில்லை என பிரேசில் முன்னாள் வீரரும், கால்பந்து உலகின் ஜாம்பவானுமான பீலே தெரிவித்தார்.

ஸ்பெயினின் பார்சிலோனா முன்கள வீரர் மெஸ்சி உலகின் தலைச்சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டு உள்ளார்.அனைத்து காலகட்டத்திலும் சிறந்த வீரர் என்ற இலக்கையும் அவர் நெருங்கிக் கொண்டு இருக்கிறார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பீலே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கால்பந்து விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு காலகட்டங்களில் சாகசம் படைத்த வீரர்களுடன் ஒப்பிடுகையில் ஆர்ஜென்ரீனா வீரர் மெஸ்சி இன்னும் நிறைய சாதிக்க வேண்டி உள்ளது. உலகின் அனைத்து தருணத்திலும் அற்புதமான வீரர் என்ற பிரசாரம் மெஸ்சியை சூழ்ந்துள்ளது. இப்படி பிரசாரம் செய்யும் மற்றும் ஒப்பீடு செய்யும் நபர்கள் ஜோகன் கிரயப், மைக்கல் பிளாட்டினி, அல்பிரடோ டி ஸ்டெபனோ ஆகிய சரித்திர வீரர்களை மறந்துவிட்டார்கள். இந்த வீரர்கள் மெஸ்சியை விட மிகச்சிறந்த சாதனை நிகழ்த்தியவர்கள்.

மான்செஸ்டர் யுனைடெட் வலிமையான அணி இங்கிலிஷ் ஸ்டைல் கால்பந்துக்கு ஒன்றி உள்ள அணி. அதே நேரத்தில் பார்சிலோனா உலகின் தலைசிறந்த அணி என பீலே மேலும் தெரிவித்தார். பீலேவின் கருத்தை பொய்யாக்கும் வகையில் ஐரோப்பா புகழின் உச்ச நிலைக்கு பார்சிலோனா அணியை மெஸ்சி கொண்டு செல்வாரா என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

2009 ஆம் ஆண்டு சம்பியன் லீக் கால்பந்து இறுதிப்போட்டியில் யுனை டெட் அணிக்கு எதிராக ஆடிய போது மெஸ்சி அடித்த கோலால் 2-0 வெற்றி கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.



மெஸ்சி

# ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்களை அடுத்தமாத இறுதியில் நடத்த திட்டம்

(கொழும்பு)

பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த மாத இறுதியில் நடத்துவதற்கு இயலுமென தேர்தல்கள் செயலகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்தார்.

இதற்கமைய 67 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த மாத இறுதியில் நடத்தப்படலாம் என அவர் கூறியுள்ளார்.

பிற்போடப்பட்டுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலை ஜூலை மாதத்துக்குள் நடத்தி முடிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் நடைபெறும் திகதி தொடர்பில் வெசாக் விடுமுறையின் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல்கள் 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலுக்கு அமைவாக இடம்பெறும் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

# புவியீர்ப்பு விசை குறைந்த நாடுகளில் இலங்கையும் உள்ளதாகக் கண்டறிவு

(கொழும்பு)

உலகில் புவியீர்ப்பு விசை மிகவும் குறைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புவியியலாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக தென் மாகாணம் மற்றும் அதன் கரையோரப் பகுதியில் மிகவும் குறைந்தளவு புவியீர்ப்பு விசை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில நாடுகளைச் சேர்ந்த புவியியல் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

என்ன காரணத்தினால் இவ்வாறு ஈர்ப்பு விசையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

புவியீர்ப்பு விசை ஒரே அளவானது என்றே அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டு வந்தது.

நிலத்தின் கீழ் காணப்படும் பாறைகளின் அடிப்படையில் புவியீர்ப்பு விசையில் மாற்றம் காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த புலம் பெயர்ந்த தமிழர்கள் தடையாக உள்ளனர்

## தூதுவர் ரிவின்த ஆரியசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரிவன்த ஆரியசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.**

இலங்கைக்கு எதிராக சர்வதேச யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தில் முறியடிக்கப்பட்டமை மகத்தான வெற்றியாகக் கருதப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் கடுமையான முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும், ஐரோப்பிய நாடுகளின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் ஓர் திருப்புமுனையாக இந்த நடவடிக்கைகளை நோக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போலியான பிரச்சாரங்களுக்கு இடமளிக்கப்படக் கூடாது, உண்மை நிலைமை களை ஐரோப்பிய நாடுகளினது பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சமாதானத்தில் மெய்யாகவே ஆர்வம் காட்டியிருந்தால் 2003ஆம் ஆண்டு புலிகள் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து விலகிய போது தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.

ஆயுத போராட்டத்தின் மூலம் ஈழக் கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்ட வரையில் சர்வதேச தலையீடு பற்றி இந்தப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அக்கறை காட்டவில்லை.

தற்போது சர்வதே யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கும் தரப்பினர், புலிகள் யுத்த முனைப்புக்களை மேற்கொண்ட போது மௌனித்திருந்தனர்.



நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்ற முனைப்பு காட்டப்பட்டது.

புலம்பெயர் தமிழர்களின் ஒரு பிரிவினர் தொடர்ந்தும் நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த தீவிர ஆர்வம் காட்டி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிங்கள மொழியிலும் தருஸ்மன் அறிக்கை

(கொழும்பு)

சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள தருஸ்மன் அறிக்கையை சிங்களத்தில் மொழிபெயர்த்து விநியோகிக்க உள்ளதாக அமைச்சர் சி.பி.ரட்நாயக்க தெரிவித்தார்.

இந்த அறிக்கை தொடர்பாக போதிய தெளிவினை பெற்றுக் கொள்வதற்கு சாதாரண மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்த நடவடிக்கை மூலம் தருஸ்மனின் அறிக்கைக்கு எதிராக மக்கள் சக்தியை உருவாக்க முடியும்.

இதேவேளை, இந்த அறிக்கையை சிங்களத்தில் மொழிபெயர்த்தவுடன், பிரதேச அரசியல்வாதிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதனிடையே தருஸ்மன் அறிக்கைக்கு எதிராக திரட்டப்பட்டு வரும் கையெழுத்திடும் நடவடிக்கைகள் பல லட்சத்தையும் தாண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர்ந்த தமிழர்களால் இலங்கையை அன்னியப்படுத்த முடியாது

## அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன

(கொழும்பு)

புலம் பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகள் காரணமாக இலங்கையை ஏனைய நாடுகளிடம் இருந்து பிரிப்பதற்கு முடியாது என அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.


தனி யொருவரின் செயற்பாடுகள் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் சட்ட திட்டங்களை எதிராக மேற்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது, புலம் பெயர்ந்த நிலையில் சில நாடுகளின் உள்ள தனிப்பட்ட சிலரால் இலங்கைக்கு எதிரான மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அந்தந்த நாடுகளின் நிலைப்பாடுகள் அல்லவெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# அச்சமும், பீதியும் இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை



(கொழும்பு)

அச்சமும் பீதியும் இல்லாமல் ஒற்றுமையாக வாழக் கூடிய சமூகமொன்றை உருவாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ராமஞ்ஞ மகா பீடத்தின் பயாகல விஹாரையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்து மீண்டுள்ள மக்கள், வாழும் நாடு என்ற வகையில் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

நீதியும் நியாயமும் கிடைக்கும் இடத்தில் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகுதியுடையவருக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் அந்த நிலைமை ஏற்பட வேண்டும் என்பதை அனைவரும் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்த உலகநாடுகள் ஒத்துழைக்க வேண்டும்

## வியட்நாம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வியட்நாம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாறாக நாட்டில் குழப்ப நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் முனைப்பு காட்டக் கூடாது என இலங்கைக்கான வியட்நாமின் புதிய தூதுவர் டொன் சின் தன்ஹா தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் நம்பகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கமும் நிதானமாக செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் இலங்கையும் பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக இலங்கை ஈட்டிய வெற்றி பாராட்டுக்குரியது யுத்த நிறைவு சமாதானத்தை மட்டுமன்றி ஏனைய நாடுகளுடனான உறவுகளை விஸ்தரிப்பதற்கும் வழிகோலியுள்ளது.

இலங்கைக்கும் வியட்நாமிற்கும் இடையில் நீண்ட காலமாக உறவு நீடித்து வருவதாகவும், அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


# துரித தெங்கு உற்பத்தி

(கொழும்பு)

வருடாந்தம் 40 இலட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்ட முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி 12 இலட்சம் தென்னங் கன்றுகளை இவ்வருடத்தில் மக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியும் என அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

தென்னங்கன்று தேவையுடையோர் தமது பிரதேசத்திற்கான தெங்கு சபையில் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அதனை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

03. 
இந்த உருவில் உள்ள ஒவ்வொரு சதுரத்தினதும் ஒருபக்க நீளம் 1சென்ரிமீற்றர் ஆகும். இவ்வுருவில் நிறந் தீட்டப்பட்டிருக்கும் பகுதியின் பரப்பளவு யாது?

04. ஒரு கேக்கில் இருந்து 3/5 பங்கை கமலும் 1/5 பங்கை நிமலும் பங்கிட்டுக் கொண்டனர். எஞ்சிய கேக் முழுவதின் என்ன பின்னமாகும்?

05. 5l நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் ஒன்றிலிருந்து 1L 350 ml நீர் வெளியே எடுக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?

06. 5m 40 cm நீளமான ஒரு நாடாவில் இருந்து 2m 60cm நீளமான ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டதெனில் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது?

07. 1kg மிளகாய் ரூபா 80 எனின், 150 g மிளகாயின் விலை யாது?

08. மு.ப. 12.40 ஐ நியம நேரத்தில் எழுதுக.

09. ஒன்று ரூபா 12.50 படி 2 கொப்பிகளையும், 1kg ரூபா 36 படி 1kg 500g சீனியையும், 1L ரூபா 80 படி 750ml தேங்காயெண்ணையும் வாங்கிய ஒருவர் கடைக்காரரிடம் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

10. கூட்டுக. $\frac{2}{3} + \frac{1}{6} =$

**14. கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்துகொண்ட தரம் 5 வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடைதருக.**

| வகுப்பு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 5A | 20 | 16 |
| 5B | 15 | 20 |
| 5C | 12 | 16 |
| 5D | 15 | 18 |

01. நான்கு வகுப்புக்களிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

02. இந்த நான்கு வகுப்புக்களிலும் உள்ள ஆண் பிள்ளைகளினதும், பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் யாது?

03. சுற்றுலாவிற்கு மூன்று பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒவ்வொன் றிலும் சமதொகையான மாணவர்கள் சென்றனர் எனின், ஒரு பஸ்ஸில் சென்ற மாணவர்கள் எத்தனை பேர்?

04. சுற்றுலாவிற்கென ஒரு பிள்ளையிடமிருந்து ரூபா 150 அறவிடப்பட்டது எனின், 5D வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளிடம் அறவிடப்பட்ட தொகை எவ்வளவு?

05. பிள்ளையொன்றுக்கு 500 ml குளிர்பானம் வீதம் எடுத்துச் செல்லப்பட்டது எனின், 5C வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்குத் தேவைப்படும் குளிர்பானத்தின் அளவு யாது?

**15. வானொலியின் வெள்ள அபாய அறிவித்தல் கூறப்பட்டு சிலமணி நேரத்தினுள்ளேயே சீற்றத்துடனான பெரும் மழை பொழியத் தொடங்கியது.**

1.
2.
3.
4.
5.
6.

**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்விமுரசு

வெளியீடு 14



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

துளசியின் பால்போன்ற வெண்ணிற மேனியிலே கரிய மறைகள் உள்ளன. அது “மொழு மொழு” என்று உருண்டு திரண்டு கொழுத்திருந்தது. கரியமணி போன்ற கண்கள், சிவந்த சின்னஞ்சிறிய வாய், நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள், பட்டுப்போன்ற மிக மிருதுவான உடல் ஆகியவை என்னைக் கவர்ந்தன. நான் “துளசி” என்று கூப்பிட்டால் அது உடனே ஓடிவரும். சிலசமயம் என் மடியிலேறிச் சுருண்டு படுத்துவிடும். நாயைக் கண்டவுடன் அது பாய்ந்தோடி வந்து என்னிடம் தஞ்சம் புகும். உடனே அதனைத் தூக்கி அணைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் அது என்னை அசையவிடாது. இரவில் எனது அருகில் அது படுத்து உறங்கும், அன்போடு துளசியை அணைத்துக் கொண்டு துயில்வேன்.

01. பந்தியில் “துளசி” என்று குறிக்கப்படுவது எதுவாக இருக்கலாம்?

02. “தஞ்சம்” என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

03. “சின்னஞ்சிறிய” எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.

04. பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.

05. பந்தியில் வந்துள்ள இரட்டைச் சொற்றொடர் (இரட்டைக்கிளவி) ஒன்றை எழுதுக.

06. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர்ஒன்றை எழுதுக.

07. பந்தியில் இடம்பெற்றுள்ள அஃறிணை ஒருமை இறந்தகால வினைச்சொல் ஒன்றை எழுதுக.

08. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெறும் பெயர் அடைமொழிச் சொல்லின் கீழ்க் கோடிடுக. நிமிர்ந்து நின்று அசையும் சின்னக்காதுகள்.

09. மிருதுவான என்பதன் கருத்து யாது?

10. “எனது அருகில் அதுபடுத்து உறங்கும்” இவ்வாக்கியத்தின் எழுவாய்ச் சொல் யாது?

**02. ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

01. தொடங்காதே / அறியமுன் / செய்யத் / ஒன்றின் / அதனைச் / இயல்பை

02. நெற்றி / நிலத்திலே / உழைத்தான் / தொழிலாளி / சிந்த / வியர்வை

**03. கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.**

01. தட்டிக்கொடுத்தல் :

02. கண்திறத்தல் :

**04. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

01. கல்யாணி நன்றாக நடனம் ஆடுவாள் ..........................................

02. காஞ்சனா நன்றாக நடனம் ஆடுவாள்: ..........................................

**05. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.**

01. பாமதி.......................................................பட்டப்படிப்பினைத் தொடர்ந்தாள்.

(பல்களைக்கழகத்தில், பல்கலைக்களகத்தில், பல்கலைக்கழகத்தில், பழ்கலைக்கழகத்தில்)

02. முயற்சி உடையார்.......................................................அடையார்

(இகழ்ச்சி, இகல்ட்சி, இகள்ச்சி, இகல்ச்சி)

**06. ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

01. வீடு : ..........................................

02. சகோதரன் : ..........................................

03. புதன்கிழமை : ..........................................

**07. பின்வரும் ஆங்கில வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. Frome where are you? : ..........................................

02. Please give me a pencil? : ..........................................

03. May I read this book?: ..........................................

**08. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**



தேகொளை கிலோ எக்க மில குமக்த?

[------------------------------------------]

கிலோவக மில ருபியல் திஹய்

[------------------------------------------]



**09. பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக.**

01. பால் வெள்ளை நிறம் : ..........................................

02. ஏழு : ..........................................

**10. பின்வரும் பெரியார்களின் பெயர்களை எழுதுக.**




[------------------------] [------------------------] [------------------------] [------------------------]

(பாரதியார், சித்திலெப்ப, மகாத்மா காந்தி, சேர்.பொன்.இராமநாதன், விவேகானந்தர், டி.பி.ஜயதிலக)



**11. பின்வரும் இடங்களின் பெயர்களைத் தெரிவு செய்க.**



[------------------------] [------------------------] [------------------------] [------------------------]

**சந்திரவட்டக்கல், சிகிரியா ஓவியம், மோனாலிசா, இசுறுமுனி, தலதாமாளிகை**

**12. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01. பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
   1. கொத்தமல்லி 2. அலரி 3. நொச்சி 4. பூவரசு

02. மீன்பிடித் துறையில் ஒரே முறையில் அதிக மீன்களைப் பிடிக்கக் கூடியமான முறை.
   1. டைனமற் மூலம் பிடித்தல் 2. வலை வீசுதல்
   3. பொறிக்கூட்டில் பிடித்தல் 4. தூண்டில் போடுதல்

03. இலங்கையில் மிக நீண்ட நதி.
   1. களனி 2. மகாவலி 3. வளவை 4. மல்வது ஓயா

04. இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்.
   1. நத்தார் 2. எசலபெரஹரா 3. ரம்ழான் 4. சித்திரை வருடப்பிறப்பு

05. மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக் கூடாது.
   1. நாம் அவரை கையால் பிடித்து இழுத்தல் 2. காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்தல்
   3. பிரதான ஆளியை நிறுத்தல் 4. இறப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

06. புராதன வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்.
   1. சுற்றுலாத் கைத்தொழில் 2. தொல்பொருளியல்
   3. கல்வித் திணைக்களம் 4. சுகாதாரத் திணைக்களம்

07. பின்வரும் உணவு வகைகளில் போசனை கூடியது
   1. பால் 2. சர்க்கரை 3. மீன் 4. கோதுமை மா

08. சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்ற ஒன்று
   1. விலை 2. நிறை 3. முடிவுத்திகதி 4. விளம்பர அலங்காரம்

09. சூரியனுக்கு மிக அண்மையிலிருப்பதால் மிக வெப்பமாயிருக்கும் கோள்
   1. வெள்ளி 2. புவி 3. செவ்வாய் 4. புதன்

10. தீ விபத்துக்குட்பட்டவர் செய்யக்கூடாதது.
   1. மண்ணில்புரளுவது 2. ஓடுவது
   3. சாக்கால் மூடுவது 4. நீரில் நனைந்த சேலையால் மூடுவது

11. வாகனங்கள் வீதியில் செல்லுமிடத்து அவற்றையும் பாதசாரிகளையும் குறிப்பிட்ட விதிப்படி நடத்துவது.
   1. சாரணர் 2. தடுப்பு 3. சிவப்புமுன் விளக்கு 4. சமிக்ஞை விளக்கு

12. சித்திரங்களுக்குப் பெயர் பெற்ற புராதன நகரம்
   1. அனுராதபுரம் 2. பொலநறுவை 3. கோட்டை 4. சிகிரியா

13. விரைவாகச் செய்திகளைத் திரட்டுவதில் அதிக பயனுடையது
   1. செய்மதி 2. ரொக்கெட்டுகள் 3. சிற்றலை 4. மீடிறன் அலை

14. கைத்தொழிலுக்கு ஆரம்ப காலத்தில் எரிபொருளாகப் பயன்பட்டது.
   1. நீராவி 2. நிலக்கரி 3. நீர்மின் 4. பெற்றோல்

15. நூல்களைப் பெற்றுப் படிக்கலாம். ஆனால் விற்பனை நிலையமல்ல. உறுப்பினராவதற்கும், நூல்களை எடுத்துச் செல்லவும், முற்பணம் தேவை. நூல்கள் அந்தந்தத் தேவையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.
   1. சனசமூகநிலையம் 2. நூலகம் 3. அச்சகம் 4. புத்தகக்கடை

**13. சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. பேருந்து வண்டி ஒன்று மு.ப.6.15 இற்குத் தனது பிரயாணத்தை முடித்துக் கொண்டது. பேருந்து வண்டி பிரயாணத்திற்காகச் செலவழித்த மொத்த நேரம் யாது?

..........................................................................................

02. சமநிறையுள்ள 6 புத்தகப் பொதிகளைத் தபாலில் அனுப்ப ரூபா 654 கட்டணம் அறவிடப்பட்டது எனின், ஒரு பொதிக்கு அறவிடப்பட்ட பணம் எவ்வளவு? ..........................................



# இசை அல்பத்தின் தோல்விக்கு காரணமான புலியாதரவுப் பாடல்

பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழரான பாடகி மாதங்கி அருட்பிரகாசம் அல்லது மாயா பயங்கரவாத கருத்துக்களுக்குள் அழுந்திப் போய் இருக்கின்றார் என்று பகிரங்கமாகத் தெரிவித்து உள்ளார் அமெரிக்காவின் பிரபல இசை அல்பம் தயாரிப்பாளரும் பாடலாசிரியருமான டிப்ளோ.

மாதங்கியால் கடைசியாக வெளிமிடப்பட்டிருக்கும் இசை அல்பமான மாயா படுதோல்வி அடைந்ததற்கு இதுவே காரணம் என்றும் அவர் கூறி உள்ளார்.

பேப்பர் பிளேன்ஸ் என்கிற இசை அல்பம் மூலமாக இசை உலகில் வெற்றிக் கொடி கட்டி பிரபலம் அடைந்தவர் மாதங்கி. இந்த அல்பத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவர்தான் டிப்ளோ. 'பேப்பர் பிளேன்ஸ்" அல்பத்தின் மாபெரும் வெற்றியை அடுத்து மாதங்கி பெரிதும் குழம்பிப் போய் விட்டார் என்றும் இசை அல்பமான மாயா முழுக்க முழுக்க புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான பிரசாரப் பாடல்களின் தொகுப்பாக அமைந்தது என்றும் டிப்ளோ குறிப்பிட்டு உள்ளார்.

'மாயா' இசை அல்பத்தின் தயாரிப்பில் டிப்ளோ பங்கேற்று இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதனை



ஒரு புதிய உலக சாதனை நியூயோரககைச் சார்ந்த பிலோக்போளுஸ் டான்ஸ் கம்பெனி உறுப்பினர்களை வைத்து EMC ஒரு மினி காரில் 26 பேரை வைத்து சாதனை.

2004 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சாதனையில் BMW MINI காரில் 21 மாணவர்கள் அமர்ந்து சாதனை படைத்தனர். 2006 ம் ஆண்டு நியூசிலாந்து அல்லஸ்தர் சீர்லிடிங் குழு 22 உறுப்பினர்களை வைத்து சாதனை படைத்தனர்.

கடந்த ஜனவரி 18 ம் திகதி நடைபெற்ற கின்னஸ் சாதனை மற்ற சாதனைகளை முறியடித்து அதிகமான உறுப்பினர்களை மினி காரில் உட்காரவைத்து காட்டினார்கள்.

# மூக்குத்தி



நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்தத் துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும்.சிறுமியர் மூக்குத்தி அணிவ தில்லை. பருவப் பெண்களே அணி கிறார்கள். ஏனெனில் பருவ வயதை அடைந்த பெண்களுக்கு தலைப்பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக்கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப்படுகிறது

மூக்கு மற்றும் காது குத்திக் கொள்வது ஏன் என்று உங்களுக்கு தெரியுமா? அதாவது ஆண்களின் மூச்சுக்காற்றை விட பெண்களின் மூச்சுக்காற்றுக்கு சக்தி அதிகம்.

இதனால் பெண்கள் மத்தியில் நிற்பவர்களுக்கு அசௌகரியமாக இருக்கும் இதனால் பெண்கள் மூக்குத்தி கொள்ளும் வழக்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும், காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன. உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து

# சோலார் நாற்காலி






சுடும் வெயிலில் சுற்றுப்புறச் சூழலில் நேரத்தை செலவிடத் தயாரா நீங்கள்? புதிய சூரிய சக்தி (சோலார்) நாற்காலி சூரிய ஒளியைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உதவப்போகிறது.

நீங்கள் சூரிய ஒளியில் அமர்ந்து கொண்டு உங்கள் மின்னணுவியல் சாதனங்களை

மின்னேற்றம் (சார்ஜ்) செய்து கொள்ளவும் முடியும். இதனைக் கொண்டு உங்கள் ipod

இற்கு கூட சார்ஜ் ஏற்றிக்கொள்ள முடியும்.



# ஆயுளைத் தீர்மானிக்கும் ரத்தப் பரிசோதனை



ஒரு மனிதனின் ஆயுட் காலத்தை குரோம்சோம்களின் மூலம் அறிந்து கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். ஒருவரது குரோம் சோம்களின் நுனிப்பகுதி 'டெலோமியர்' என அழைக்கப்படுகிறது. அவை நீளமாக இருந்தால் ஒருவரது ஆயுட்காலம் அதிகமாக இருக்கும்.

அதே பட்சத்தில் நுனிப் பகுதி சிறிதாக இருந்தால் அவரின் வாழ்நாள் குறைவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.டெலோமியரின் அளவை கண்டுபிடிக்க ஒரு சிறிய ரத்தப் பரிசோதனை மட்டுமே போதும்.

இச்சோதனையை மட்ரிட் நகரில் உள்ள ஸ்பெயின் தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த மரியா பிளாஸ்கோ மேற்கொண்டார். ஐரோப்பாவின் பல நாடுகளில் ரத்த மாதிரி எடுத்து இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

# பேசினால் போதும்





பேசினாலே பற்றறியில் சார்ஜ் ஏறும் புதிய வகையான கைத் தொலைபேசிகளை தென் கொரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த புதிய தொழி நுட்பத்தின்படி ஒருவர் பேசும் ஒலி எலக்ட்ரிக் பவராக மாறி கைத் தொலை பேசியின் பற்றறியில் சார்ஜ் ஏற்றப் படுகிறது. மேலும் கைத்தொலை பேசியில் பேசுபவரை சுற்றி கேட்கும் சத்தம், இசை உள்ளிட்டவைகளின் ஒலியாலும் இவ்வகையான தொலைபேசியில் சார்ஜ் ஏற்றலாம்.

சியோல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான சாங்வூகிம் என்பவர் இத்தகைய கைத்தொலைபேசியை கண்டுபிடித்திருப்பதாக த சன்டே டெலிகிராப் என்னும் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.மின்சாரம் இன்றி சுற்றுப்புறத்தில் உள்ள ஒலிகளை மட்டுமே பயன்படுத்தி கைத்தொலை பேசியின் பற்றறியில் சார்ஜ் ஏற்றப் படுவது நிரூபிக்கப்பட்டுள்ளது.கைத் தொலைபேசி பயன்பாட்டில் இல்லா விட்டாலும் சத்தம் நிறைந்த இடங்களில் வைக்கப்படும் இத்தகைய கைத் தொலைபேசிகள் தானாக சார்ஜ் ஏற்றப்படுகின்றன.

# வினோதமான சைக்கிள்






இதுவரை நீங்கள் எத்தனையோ விதவிதமான சைக்கிள்களையெல்லாம் பார்த்திருப்பீர்கள் ஏன் பயன்படுத்தியும் இருப்பீர்கள். ஆனால் இது மாதிரியான ஒரு சைக்கிளைப் பார்த்த அனுபவம் யாருக்கும் ஏற்பட்டிருக்காது.

அப்படி என்னதான் இருக்கிறது இந்த சைக்கிளில் என்று நீங்கள் சிந்திக்கலாம். இந்த சைக்கிளைப் பொறுத்த மட்டில் இதற்கு பூட்டு அவசியம் இல்லை. காரணம் இந்த சைக்கிளையே பூட்டாக மாற்ற முடியும். வினோதமான வித்தியாசமான முயற்சி அல்லவா? சைக்கிளையே வளைத்து பூட்டு போட முடியும்.இந்த அரிய சைக்கிளை பிரிட்டனைச் சேர்ந்த கெவின் ஸ்கொட் என்பவர் வடிவமைத்துள்ளார்.

# தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை

## என்கிறார் நரேந்திரமோடி



(சென்னை)


தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், தேசிய அளவிலான அரசியலிலும் மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஊழலுக்கு எதிராக வாக்களித்த தமிழக மக்களுக்கு எனது வாழ்த்துக்கள்,““ என, குஜராத் முதல்வர் நரேந்திரமோடி கூறியுள்ளார்.

தமிழகத்தின் புதிய அமைச்சரவை பொறுப் பேற்றுக் கொள்ளும் விழாவில் கலந்து கொள்வ தற்காக, குஜராத் முதல்வர் நரேந்திரமோடி சென்னை வந்தார். சென்னை விமான நிலை யத்தில் அவர் அளித்த பேட்டியில் -

தமிழக சட்டசபை தேர்தலில் ஊழல், விலைவாசி உயர்வு ஆகியவற்றிற்கு எதிராக வாக்களித்த தமிழக மக்களுக்கு எனது வாழ்த்துக்கள். இது மிகப்பெரிய வெற்றி. தமிழக தேர்தல் முடிவுகள் தமிழகத்திற்கு மட்டுமல்லாது, தேசிய அளவிலான அரசியலிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக விரைவில் மாறும். அதற்கான திறமை முதல்வர் ஜெயலலிதாவிடம் இருக்கிறது. அவர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.இவ்வாறு நரேந்திரமோடி கூறினார்.

# பெட்ரோல் விலை உயர்வுக்கும் அரசிற்கும் தொடர்பில்லை

## பிரணாப் கூறுகிறார்



பெற்ரோல் விலை உயர்வுக்கும் மத்திய அரசுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்

டில்லியில் செய்தி யாளர்களிடம் பேசிய அவர் -

எண்ணெய் நிறுவ னங்களே பெட்ரோல் விலையை தீர் மானிக் கின்றன. சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப, பெற் ரோலிய பொருட்களின் விலையை நிர்ணயம் செய்யும் உரிமை, எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

2010 ஆம் ஆண்டு பெட்ரோலிய பொருட்களின் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. ஆகவே, பெட்ரோல் விலை உயர்வுக்கு மத்திய அரசை குறை கூற முடியாது. சர்வதேச சந்தையில் கச்சாய் எண்ணெய் விலை உயர்வால் பெட்ரோல் விலை உயர்ந்துள்ளது எனத் தெரிவித்தார்.

## சென்னை நில விவகாரம்

# ராஜாத்தி அம்மாளின் கணக்காய்வாளரிடம் விசாரணை செய்த சி.பி.ஐ யினர்

(சென்னை)

புதுடில்லி, தமிழக முன்னாள் முதல வர் கருணாநிதியின் மனைவி ராஜாத்தி அம்மாளின் கணக்காய்வாளர்களான ரத்தினம், மலேசியா சரவணன் ஆகிய இருவரிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்த விசா ரணை தில்லியில் உள்ள சி.பி.ஐ தலைமை அலுவலகத்தில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

அவர்கள் இருவரிடமும் சென்னையில் உள்ள டாடாவுக்குச் சொந்தமான வோல் டாஸ் நிறுவனத்தின் நிலம் நீண்டகாலக் குத்தகையில் மாற்றம் செய்யப்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரித்ததாகத் தெரிகிறது.

வோல்டாசுக்குச் சொந்தமான நிலம் முதலில் 18 நபர்களின் பெயரில் நீண்ட காலக் குத்தகைக்கு (லீஸ்) மாற்றப் பட்டது. ஆனால், திடீரென்று 2009 ஆம் ஆண்டு ஏப்ரலில் சரவணன் பெயருக்கு மாற்றப்பட்டது.

மாற்றம் செய்யப்பட்ட ஒரு வார காலத்துக்குள்ளாகவே அந்த நிலம் மலேசியாவைச் சேர்ந்த சங்கல்பம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்துக்குக் கைமாறியது. இதுதொடர்பாக கணக்காய் வாளர் ரத்தினம், மலேசியா சரவணன் ஆகியோரிடம் விசாரணை நடைபெற்ற தாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரத்தில் சி.பி.ஐ நடத்தி வரும் விசாரணை, மேலும் கிடைக்கப் பெறும் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வரும் 20 ஆம் தேதி கனிமொழிக்கு ஜாமீன் கிடைக்குமா என்பது தற்போது கேள்விக் குறியாக உள்ளது என சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# வடிவேலுவிற்கு தொடரும் கெட்டகாலம் அவரது பண்ணை வீடு மீதும் தாக்குதல்



(சென்னை)

சென்னையை அடுத்த படப்பை அருகே நடிகர் வடிவேலுவின் பண்ணை வீட்டின் கண்ணாடி ஜன்னல்கள் மர்ம நபர்களால் அடித்து நொருக்கப்பட் டது.

படப்பையை அடுத்த புஷ்பகிரி பகுதியில் நடிகர் வடிவேலு வுக்கு மாமர தோப்புடன் கூடிய பண்ணை வீடு உள்ளது. இங்கு வேலு என்பவர் காவ லாளியாக வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கடந்த திங்கள்கிழமை மாலை வடிவேலு வின் பண்ணைக்கு வந்த சுமார் 30 இற்கும் மேற்பட்ட மர்ம நபர்கள், காவ லாளி வேலுவிடம் வடிவேலு வின் தொலைபேசி எண்ணைக் கொடுக்குமாறு மிரட்டியுள்ளனர்.

அதற்கு அவர், தொலைபேசி எண் தெரியாது என்று கூறியுள்ளார். உடனே மர்ம நபர்கள் வேலுவுடைய செல் போனைப் பிடுங்கி அதில் வடிவேலு வின் நம்பர் இருக்கிறதா என பார்த்த னராம். அதில் நடிகர் வடிவேலுவின் எண் இல்லாததால் செல்போனை அவரிடம் கொடுத்த மர்ம நபர்கள், வீட்டின் 6 கண்ணாடி ஜன்னல்களை அடித்து நொறுக்கினர்.

மேலும் வரும் சனிக்கிழமைக் குள் இந்த இடத்தை காலி செய்துவிட வேண்டும் என்றும் இல்லையென்றால் நாங்களே ஜேசிபி இயந்திரம் கொண்டு வந்து வீட்டை இடிப்போம் என்றும் மிரட்டிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து காவலாளி வேலு பண்ணை மேலாளர் சங்கருக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார். மேலாளர் சங்கர் மணிமங்கலம் காவல் நிலை யத்தில் புகார் தெரிவித்தார். இது குறித்து மணிமங்கலம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.



நேற்றுமுன்தினம் முதலமைச்சராகப் பதவியேற்ற ஜெயலலிதா விற்கு விஜயகாந்த் வாழ்த்துத் தெரிவிப்பதைக் காணலாம்.




# கல்மாடிமேற்கொண்ட ஊழல் காரணமாக நாட்டின் கௌரவம் களங்கப்பட்டுள்ளது

## சி.பி.ஐ .நீதிமன்றில் தெரிவிப்பு

கொமன்வெல்த் போட்டி ஊழல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சுரேஷ் கல்மாடி தன்னைப் பிணையில் விடுதலை செய்யக்கோரி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார்.

அம்மனு நீதிபதி தல்வந்த் சிங் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அம்மனுவுக்கு சி.பி.ஐ. தரப்பில் சி.பி.ஐ. சட்டத்தரணி பதில் அளித்தார். கல்மாடிக்குப் பிணை வழங்கக்கூடாது என்று அவர் வாதாடினார். அவர் கூறியதாவது - இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட மற்றவர்களுக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது. எனவே கல்மாடிக்கும் பிணை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. சுரேஷ் கல்மாடியின் செயல் நாட்டின் கௌரவத்தையே களங்கப்படுத்தி விட்டது எனத் தெரிவித் தார். இதையடுத்து கல்மாடி பிணை மனு மீதான தீர்ப்பை 21 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

# தமிழகத்தில் தோல்வி ஏற்படுமென தேர்தலுக்கு முன்னரே தெரியுமாம்

## இளங்கோவன் அடித்தார் பல்டி

காங்கிரஸ் கட்சிக்கு தோல்வி ஏற்படும் என தேர்தலுக்கு முன்பே தெரியும் என்று ஈவிகேஎஸ் இளங்கோவன் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்க ளிடம் பேசிய அவர், முதல்வ ராகப் பதவி ஏற்ற ஜெயலலி தாவுக்கும், எதிர்க்கட்சி தலை வராக பதவி ஏற்கவுள்ள விஜய காந்த்துக்கும் வாழ்த்துக்கள். தேர்தலில் மக்கள் பணத்திற்கு சோரம் போய் விடுவரோ என பயந்த நேரத்தில், தன்னிச்சை யாகவாக்களித்து தமிழகம் பெருமை பெற சிறப்பாக பணி யாற்றினர்.

நடக்க இருந்த தவறுகளை யும், தில்லுமுல்லுகளையும் தடுத்த பெருமை தேர்தல் திணைக்களத்திற்கு கிடைத்துள் ளது.

தமிழகத்தின் மின் பற்றாக் குறையை போக்குவது முதல் வேலை என ஜெயலலிதா கூறியது பாராட்டுக்குரியது. தடையில்லாத மின்சாரம் இருந் தாலே பல பிரச்னைகள் இருக் காது. தொழில் வளம் பெறும். விவசாயிகள் மகிழ்ச்சி அடைவர்.

தேர்தலில் 63 நாயன்மார்க ளாக காங்கிரஸ் வேட்பாளர் கள் போட்டியட்டனர். தற்போது பஞ்ச பூதங்களாக வெற்றி பெற்றுள்ளனர். காங்கிரஸ் தோல்வியை ஆராய்வது இப் போது சரியாக இருக்காது. இந் நிலை ஏற்படும் என தேர்தலுக்கு முன்பே தெரியும். இனி நடப் பவையாவது நல்லவையாக இருக்க

வேண்டும் என தொண்டர்கள் எதிர்பார்க்கின்றனர். தங்கபாலு பதவி விலக மேலிடம் உத்தரவிட்டது. காங்கிரஸுக்குப் புதிய தலைவரை சோனியா விரைவில் அறிவிப்பார்.

சட்டசபை தேர்தலில் காங் கிரஸ் தோல்விக்கு சகவாச தோஷம் தான் முக்கிய காரணம். குடும்ப அரசியல் வளர்ந்து விட கூடாது என்பதற்காக தேர் தலில் வாக்களித்தனர். சோனியா யாரை தலைவராக அறிவித்தா லும், அதை ஏற்று காங்கிரசை வளப்படுத்த தொண்டர்கள், தலைவர்கள் ஒன்றாக இணைந்து செயற்பட பாடுபடுவேன் எனத் தெரிவித்தார்.

# சர்வதேச நாணயத்தலைவர் மீது மேலுமொரு பாலியல் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

நியூயோர்க் விடுதி ஒன்றில் பெண் ஊழியர் மீது பாலியல் பலாத்தகாரம் மேற்கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் தொமினீக் ஸ்டிராஸ் கானின் மீது பிரான்ஸில் பெண் எழுத்தாளர் ஒருவரும் பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



கடந்த ஒன்பது வருடங்களுக்கு முன் தன்னிடம் தொமினீக் ஸ்டிராஸ்கான் மோசமாக நடந்து கொண்டிருந்தார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இளம் பெண் ஊடகவியலாளரும், எழுத்தாளருமான டிரிஸ்தன் பனோன் 2002ஆம் ஆண்டு தொமினீக் ஸ்டிராஸ்கானிடம் ஒரு செவ்வியொன்றை பெறுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

செவ்வியளிப்பதற்காக இருவரும் ஒரு அறைக்குள் சென்று கலந்துரையாடிய நிலையிலேயே அவர் தன்னை பலவந்தப்படுத்தியதாக பெண் எழுத்தாளர் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய தாயாரின் அறிவுறுத்தலின் காரணமாகவே அந்த தருணத்தில் ஸ்டிராஸ் கானுக்கு எதிராக தான் நீதிமன்றம் செல்லவில்லை என பனோன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சர்வதேச நாணய நிதி மையத்தின் தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கான் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள், பிரான்சில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் கிளப்பியுள்ளன.

கானின் மனைவியும் இந்த தகவலை தான் நம்ப மறுப்பதாகக் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளுக்கு நாணய நிதிய தலைவர் சம்மதித்துள்ளார்.

தற்போது நியூயோர்க்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கான், டி.என்.ஏ., விரல் நகங்கள் மற்றும் சம்பவத்தின் போது அணிந்திருந்த ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ் அறிவியல் சோதனைகளுக்கு சம்மதம் அளித்துள்ளார்.

இதேவேளைஸ்டாரஸ்-கான் பிணையில் செல்ல மறுக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது

# கடாபியை கைது செய்யும் சூழ் நிலையில் போர் நிறுத்தத்திற்கு லிபிய அரசு அழைப்பு

(திரிபோலி)



கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்ய சர்வதேச நீதிமன்றம் (ஐ.சி.சி.,) தயாராகிவிட்ட நிலையில், லிபிய அரசு திடீரென உடனடிப்போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

லிபியாவில் அதன் தலைவர் கடா பிக்கு எதிரான மக்கள் போராட்டம், நான்காம் மாதமாகத் தொடர்கிறது.கடாபித் தரப்பு ராணுவத்தின் போர்க் குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் ஏற்கனவே சர்வதேச குற்றவியல் தாக்கல் செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து, கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஐ.சி.சி., இறங்கியுள்ளது.இதுகுறித்து பேட்டியளித்த ஐ.சி.சி.,யின் சட்டத்தரணி கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முடிந்து விட்டன. என்றார்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ.நா.,வின் சிறப்புத் தூதர் அப்துல் இலா அல் காதிப் லிபியாவுக்குச் சென்று, பிரதமர் பாக்தாதி மஹ்மூதியைச் சந்தித்துப் பேசினார்.இச்சந்திப்புக்குப் பின் பேட்டியளித்த மஹ்மூதி,"லிபிய அரசு உடனடிப் போர் நிறுத்தத்தை விரும்புகிறது. அத்தோடு, "நேட்டோ'வும் தனது தாக்குதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜனநாயகப் பேச்சுவார்த்தைகள் மூலம், லிபிய மக்கள் தங்கள்உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான உரிமைகளை உடையவர்கள் என்றும் தெரிவித்தார்

# பின்லேடனுக்கு உதவி புரிந்த சகோதரர்கள் கைதாகினர்



(இஸ்லாமாபாத்)

பின்லேடன் கொல்லப்பட்டதையடுத்து அவருடன் தொடர்பு வைத்திருந்தவர்களை பாகிஸ்தான் அரசு கைது செய்து வருகிறது. இந் நிலையில் சைபர்- பக்துன்சவா மாகாணத்தின் ஷாங்லா மாவட்டத்தில் மார்டஸ் அருகே உள்ள கோட்காய் என்ற கிராமத்தை சேர்ந்த சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது பெயர் ஷியா உல் ஹக் (24), மற்றும் ரசூல்ஹசன் (22). இவர்கள் வீட்டின் உரிமையாளர்கள் அர்ஷத்கான், தாரிக்கான் ஆகியோர் மூலம் பின்லேடனுக்கு உதவி வந்தனர். இவர்கள் 2 பேரும் பல ஆண்டுகளாக குவைத்தில் தங்கியிருந்தனர். அண்மையில்தான் இவர்கள் பாகிஸ்தான் வந்தனர்.

# பொதுமக்களை சித்திரவதை செய்த படை அதிகாரிகளுக்கு ஆயுள் தண்டனை

ஆர்ஜன்ரீனாவில் பொதுமக்களை சித்திரவதை செய்த இராணுவ உத்தியோகத்தர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வட ஆர்ஜன்ரீனாவின் நீதிமன்றம் எட்டு முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கு இவ்வாறு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.1976ம் ஆண்டு நடைபெற்ற அழுக்கு யுத்த காலப்பகுதியில் நிராயுதபாணிகளான அப்பாவி பொதுமக்கள் மீது குறித்த இராணுவ அதிகாரிகள் அடக்குமுறைகளைப் பிரயோகித்துள்ளனர்.

1976ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி மொன்டெரனோஸ் இடதுசாரி கட்சியைச் சேர்ந்த 22 பேரை இராணுவத்தினர் சிறைச்சாலையில் சித்திரவதை செய்து கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.துன்புறுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அழுக்கு யுத்த காலப்பகுதியில் 30000 த்திற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கடத்தப்பட்டோ, கொலை செய்யப்பட்டோ அல்லது சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டோ இருக்கலாம் என கருதப்படுகின்றது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடந்த ஓராண்டு காலமாக விசாரணைகள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ உயரதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றில் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட போது பாதிக்கப்பட்டவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

# விஜேவீர, பிரபாகரன் மற்றும் பின்லேடன்....

*(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இலங்கை இராணுவம் பிரபாகரனுடனும் அவரது இராணுவத்துடனும் போரிட்டபோது புலிகள் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்ட மிகப் பெரிய சனத்தொகையை மனிதக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்தது. தருஸ்மான் அறிக்கைகூட புலிகள் கனரக ஏவுகணைகளை தங்களுக்கு ஒரு பாதுகாப்புக் கேடயமாக அமைக்கப்பட்ட இடத்தில் வாழ்ந்த பொதுமக்கள் மத்தியில் கூட நிறுவியிருந்ததாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த அறிக்கை மேலும் ஏற்றுக்கொள்வது பாதுகாப்பு படையினரிடம் சரணடைய முயன்ற பொதுமக்கள் மீது புலிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக. இருந்தாலும் தருஸ்மான் அறிக்கையில் சொல்லப்படாதது, புலிகள் பொதுமக்களிடையே தற்கொலை குண்டுதாரிகளை ஊடுருவச் செய்து சரணடைய முயலும் பெருந்தொகை பொதுமக்களை பல சந்தர்ப்பங்களில் தற்கொலை குண்டுதாரிகளை வெடிக்கவைத்து அதன் மூலம் கொலை செய்ததை.

உண்மையில் மூன்று இலட்சம் பொதுமக்களை மிகக் குறுகிய சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள மட்டுப் படுத்தப்பட்ட இடத்துக்குள் மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்திருக்காவிட்டால் அந்த போர் அங்கு ஒருபோதும் இடம் பெற்றிருக்காது. இந்தப் புதிய மற்றும் தனித்தன்மையான அனுபவம் உலக யுத்த சரித்திரப் பக்கங்களில் சந்தேகமின்றி இடம்பெறும்.

நாட்டில் உள்ள தமிழ் சனத் தொகையின் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே வடபகுதியில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழ்ந்தனர். அந்தப் பகுதியை விட்டு வெளியேறக்கூடிய அனைவரும் நாட்டின் மற்றப் பகுதிகளுக்கோ அல்லது மேற்கின் பசுமைப் பிரதேசங்களைத் தேடியோ போய்விட்டார்கள். உண்மையில் ஏழ்மையான குடும்பங்கள், அவர்களின் பிள்ளைகள் புலிகளில் இணைந்திருந்த படியினாலும் மற்றும் சில காரணங்களுக்காக புலியினருடன் சில தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த காரணத்தாலும் அங்கு மீதமாக இருந்தனர். அந்தப் பகுதி மக்களைக் கொண்டு புலிகள் ஒரு பொதுமக்கள் பாதுகாப்புப் படையையும் ஏற்படுத்தியிருந்தது. அவர்களுக்கு யுத்த நிலை சம்பந்தமான பகுதிப் பயிற்சியும் வழங்கப் பட்டிருந்தது. இதை வைத்து நோக்கும்போது புலிகள் தனது பாதுகாப்புக்காக மனிதக் கேடயமாக பயன்படுத்திய அனைவரையுமே உலகின் நியாயத்தின் முன்னால் பொதுமக்கள் சனத்தொகை என வகைப் படுத்த முடியாது.

டி.பி.எஸ் ஜெயராஜ் அவர்களால் ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பிரசுரித்திருப்பதன்படி, புலிகள் யுத்தம் வெடித்த சமயத்தில் சுமார் 30,000 போராளிகளை தன் வசம் வைத்திருந்தது. போர் நிகழ்ந்த பகுதிகளில் 17 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் சுமார் 165 உள்நாட்டு ஊழியர்களும் போர் முடிவடையும் காலம் வரையிலான முழுக் காலகட்டத்திலும் அங்கு வசித்துள்ளார்கள். பொதுமக்களை கண்மூடித் தனமாகவும் அரக்கத் தனமாகவும் தாக்கும் ஒரு கொள்கை கடைப்பிடிக்கப் பட்டிருக்குமாயின் குறைந்தது இந்த ஊழியரின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை யினருக்காவது இழப்புக்கள் ஏற்பட்டு பாதிப்புக்கு உள்ளாகியிருக்க வேண்டும். அவர்களும் பொதுமக்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள். ஆனால் அப்படியான சம்பவங்கள் எதுவும் அறிவிக்கப் படவில்லை.

புலிகள் மீது அனுதாபமுள்ள தமிழ் புலம் பெயர்ந்தவர்கள்தான் பெரிதாக அழுது கூக்குரலிட்டு இலங்கை அரசாங்கத்தை தண்டிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகிறார்கள். அவர்களைக் கொண்டிருக்கும் ஒரு பெரிய பகுதியினர்தான் தங்களது அளவற்ற பங்களிப்பை வழங்கி உறுதியான இயக்கமான புலிகளினை அதன் இறுதியான தோல்வியினை அடையும்படி செய்தார்கள்.

அவர்கள் உண்மையான காரணிகளையும் இலங்கையின் யதார்த்த நிலையினையும் முற்றாகப் புறந்தள்ளி விட்டார்கள். புலிகளின் நடவடிக்கைகளில் உள்ள நல்ல மற்றும் தீய விளைவுகளை சீர்தூக்கிப் பார்க்கவோ கண்காணிக்கவோ ஒருபோதும் முயன்றதில்லை. இப்படியாக இறுதியான பகுப்பாய்வின்படி புலிகள் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களின் ஆதரவில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஆனால் தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் பாரிய அளவிலான நிதி ஆதரவினை அவர்களுக்குப் பாய்ச்சினார்கள். இதன் விளைவாகத் தனது உண்மையான பலத்தை விட மிகவும் நவீனரக ஆயுதங்களில் நம்பிக்கை கொண்ட ஒரு இயக்கமாக புலிகள் மாற்றம் பெற்றது. மேலும் இறுதியாக அது மக்களின் சக்தியைவிட ஆயுதத்தின் சக்தியையே நம்பும் ஒரு பயங்கரவாத இயக்கமாக மாறிவிட்டது.

தமிழ் புலம் பெயர் சமூகத்தினரால் செலுத்தப்பட்ட செல்வாக்கின் அழுத்தம் காரணமாகத்தான் புலிகள் ஈழத்துக்கு குறைவான எந்த ஒரு தீர்வையும் நிராகரகரிக்கும் கடின கொள்கையைப் பின்பற்றி வந்தது. இதன்படி பார்த்தால் மேற்கில் உள்ள தமிழ் புலம் பெயர் சமூகத்தினரின் பெரும் பாதிப்பு காரணமாகவே புலிகள் இறுதியில் வேரோடு அழிக்கப்பட்டனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் இயக்கவியல்புகள் மற்றும் மரபுரீதியான யுத்த நடைமுறைகளும் முற்றிலும் வித்தியாசமானவை. அரசாங்கப் படையினருக்கு எதிராளியை அவர்கள் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறுபட்ட தோற்றங்களிலும் வடிவங்களிலும் தோன்றுவதால் அவர்களை இனங்காணுவது அத்தனை சுலபமல்ல. அவர்கள் சீருடைகளில் தோன்றும் வேளைகளைத் தவிர, மற்ற நேரங்களில் சாதாரண பொதுமக்களின் உடைகளிலேயே இருப்பார்கள்.

அவர்கள் தாக்குதல் நடத்தும் சமயங்களில்தான் அவர்களைப் பார்க்க முடியும். அதே வேளை எதிரிகளைப் பார்க்க முடியாத சமயங்களில் அவர்கள் தாக்குவதற்கு மறைவாகப் பதுங்கி இருப்பார்கள். பயங்கரவாதிகள் சட்டங்களுக்கோ நீதியின் தரங்களுக்கோ அல்லது மரபுகளுக்கோ மதிப்பளிக்க மாட்டார்கள். மற்றும் தங்கள் இலக்குகளை அடைவதற்காக சமூகத்தை அச்சுறுத்தி, ஆயிரக் கணக்கான மக்களைக் கொலை செய்தல் மற்றும் அங்கவீனப்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். சிலவேளைகளில் எதிரி அப்பாவி பொதுமகன் வடிவத்தில் காட்சிதரும் ஒரு மனித வெடிகுண்டாகவும் இருப்பான். இத்தகைய எதிர் தரப்புடன்தான் சட்டபூர்வமான இராணுவம் எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப் படுகிறது.

இதுவரை ஒரு சுதந்திரமான நாட்டில் சட்டபூர்வமான இராணுவம் பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு போரில் எப்படிப் போராடவேண்டும் என ஐநா இதுவரை தீர்மானம் செய்யவில்லை. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு ஏற்ற பொருத்தமான நடைமுறைகளுக்கான கொள்கைகள் இதுவரை வரைவு செய்யப்படவில்லை. தருஸ்மான் அறிக்கை மற்றும் அதைத் தொகுத்த நிபுணர் குழுவினர் உண்மையில் பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு யுத்தத்தில் உள்ளடங்கிய இயக்கவியல்புகளை கணக்கில் கொள்ளவில்லை.

மேற்சொன்ன கருத்துக்களின்படி மரபுவழி யுத்தங்களுக்காக வரையறுக்கப் பட்டிருக்கும் வழிகாட்டல்களும் மற்றும் தத்துவங்களும் அதேபடி பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தங்களுக்கும் பொருந்தும் என ஐ.நா. நம்புமாகவிருந்தால், ஐ.நாவை சட்டபூர்வமான நாடுகளின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கும் ஒரு சர்வதேச அமைப்பாக விளக்க முடியாது, ஆனால் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் ஒரு அமைப்பு என்று விளக்கலாம்.

அத்தகைய ஒரு தோற்றத்தின் உருவாக்கம் பொதுவாக ஐ.நா. அதன் அங்கத்துவ நாடுகள், மற்றும் உலகம் என்பனவற்றுக்கு நல்லதல்ல என்று முன்கூட்டியே தெரிவிக்க முடியும்.

இந்தச் சூழ்நிலையின் கீழ் ஜனாதிபதி ஒபாமாவினால் வழிநடத்தப்படும் அமெரிக்க அரசாங்கம் பயங்கரவாதத்தின் பாதிப்பினால் அடிபட்டிருந்தும் கூட இலங்கையின் பிரச்சினைகளை அதன்• சரியான கண்ணோட்டத்தில் கருதுவதற்குத் தவறியிருப்பது மிகவும் துர்ப்பாக்கியமே.

# விஜேவீர, பிரபாகரன் மற்றும் பின்லேடன் ஆகியோரது மூன்று கொலைகள்

விக்டர் ஐவன்

அமெரிக்காவின் முதல்தர எதிரியும், முழு அமெரிக்காவையும் கிடுகிடுக்க வைத்த பயங்கரவாதியுமான பின்லேடனை இறுதியில் அமெரிக்காவால் ஒருவழியாகக் கொல்ல முடிந்தது. சில காலங்களுக்கு முன்பு அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவுகளால் பின்லேடன் பாகிஸ்தானிலுள்ள அபோட்டாபாத் எனுமிடத்திலுள்ள ஒரு மாளிகையில் மறைந்து வாழுவதைக் கண்டுபிடிக்க இயலுமாகவிருந்தது. கண்டுபிடிப்புகள் உறுதியாக்கப்பட்டதும், அமெரிக்காவின் ஜனாதிபதியும் மற்றும் அவரது சிரேஷ்ட உதவியாளர்களும் உலகின் மறுபக்கத்திலிருந்து வீடியோ ஒளித்திரைகளில் நடைபெறும் நடவடிக்கைகளை பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் பின்லேடனை கொலை செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கிடைக்கப் பெற்றிருக்கும் தகவல்களின் அடிப்படையில், சீல் என அழைக்கப்படும் விசேட படைப் பிரிவைச் சேர்ந்த ஆறு கடற்படை உத்தியோகத்தர்களின் விசேடமான குழுவானது மூன்று உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றியது.

ஒரு பயங்கரவாத இயக்கத்துக்கு எதிரான ஒரு போருக்கும் மற்றும் மரபுவழியிலான யுத்த முறைக்கும் இடையே உள்ள பாரிய வேறுபாட்டை அமெரிக்கா பின்லேடனைக் கொலை செய்திருக்கும்



இந்த நடவடிக்கையின் வெளிச்சத்தில் தெளிவாக விளக்கலாம்.

இந்தத் திட்டத்துக்குப் பயன்படுத்தப் பட்ட உலங்கு வானூர்திகள் பாகிஸ்தான் அரசாங்கத்தின் அனுமதியைப் பெறாமல் பாகிஸ்தானின் வான்பரப்பை அத்துமீறி ஆக்கிரமித்துள்ளன. பின்லேடனைக் கைது செய்வதற்காக நீதிமன்ற உத்தரவு எதுவும் பெறப்படவில்லை. அதற்குப் பதிலாக நடவடிக்கைக் குழுவினர் பின் லேடன் மறைந்திருந்த வீட்டுச் சுற்றுப்புறத்துக்குள் புயல்போல் நுழைந்து அங்கிருந்த மனிதர்கள் எல்லோரையும் கொன்றிருக்கிறார்கள். இந்நடவடிக்கையில் ஒரு பெண் கொல்லப்பட்டதுடன் மற்றும் இரண்டு பெண்கள் காயமடைந்திருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பின் லேடனின் உயிரற்ற உடலை அவரது உறவினர்களிடம் கையளிக்கவில்லை.

சிலவேளைகளில் அவர்கள் விரும்பியிருந்தால் இந்த நடவடிக்கையில் பின்லேடனை உயிரோடு ஒரு கைதியாகப் பிடித்திருக்க முடியும். அதில் சொல்லப்பட்டது என்னவெனில் அவருக்கு சரணடைவதற்குரிய ஒரு தெரிவு வழங்கப்பட்டது. ஆனால் அவர் அதற்கு உடன்பட மறுத்தபடியால் அவர் கொல்லப்பட்டார் என்று. இருந்தாலும் இது நம்புவதற்குக் கடினமான ஒரு கதை. இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டதே அவரைக் கொல்ல வேண்டும் என்கிற எண்ணத்துடன்தான் என்பது மிகத் தெளிவு. சிலவேளைகளில் பின் லேடன் ஒரு கைதியாகவேனும் உயிரோடு இருந்தால் அது பின்லேடன் இறப்பதைக் காட்டிலும் அதிக பிரச்சினைகளை உருவாக்கலாம் என்று முன்கூட்டியே கணக்குப் போடப்பட்டதால்தான் அது பின் லேடனைக் கொலை செய்வதற்குச் சாதகமான முடிவெடுக்க அவர்களைத் தூண்டியிருக்கலாம். இத்தகைய முடிவுக்கு வருவது சரியானதே.

ஜே.வி.பி.யினரது இரண்டாவது கிளர்ச்சியின்போது இரத்தம் படிந்த கரங்களையுடைய ஜே.வி.பி. போராளிகளையும் மற்றும் அவர்களின் தலைவர்களையும் நசுக்குவதற்காக இராணுவத்தினர் கையாண்ட கொள்கையும் கிட்டத்தட்ட பின்லேடன் விடயத்தில் அமெரிக்கா பின்பற்றியதற்குச் சமமானதே. 1988 ஜனாதிபதித் தேர்தலின் பின் உடனடியாக ஜனாதிபதி தடுப்புக் காவலில் இருந்த சுமார் 1800 ஜே.வி.பி. சந்தேகநபர்களை அவர்களின் மனச்சாட்சிமீது நம்பிக்கை வைத்து விடுதலை செய்தார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால் கூட்டமாக விடுதலை செய்யப்பட்டவர்கள் மீண்டும் ஒன்றிணைந்து திரும்பவும் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். இந்தச் சம்பவத்தின் மூலம் ஜனாதிபதி கசப்பான பாடம் ஒன்றை படிக்கவேண்டி நேர்ந்தது. அதன்பிறகு அவர் கிளர்ச்சிகளை ஒடுக்க மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் தேவையற்ற தலையீடுகளை செலுத்தாமல் நடுநிலை வகிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்ததோடு பாதுகாப்பு படையினரையே முடிவுகளை எடுக்க அனுமதித்தார்.

இந்தக் கிளர்ச்சியோடு எதுவித தொடர்புமற்ற எம்பிலிப்பிட்டி மாணவர்களின் சித்திரவதை போன்ற ஒன்றிரண்டு முக்கிய நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற கொலைகளைத் தவிர உண்மையில் இந்த ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட பெரும்பாலானவர்களின் கரங்கள் இரத்தக்கறை படிந்தவை யாகவே இருந்தன. பாதுகாப்பு படையினர் தங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கிருந்த கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே போராட வேண்டியிருந்தது. கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்புப் படையினரை பிடிக்க முடியாத சந்தர்ப்பங்களின் போதெல்லாம் காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படையினரின் குடும்ப அங்கத்தவர்களைக் கொலை செய்யும் ஒரு கொள்கையை நடைமுறைப் படுத்தினார்கள். இதன் விளைவாக இருபகுதியினரும் ஒருவகை

**தமிழில் : எஸ்.குமார்**

வஞ்சம் தீர்க்கும் உணர்வுடனேயே போரிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் போரின் வெற்றி முற்றாகத் தங்கியிருந்தது, ஒரு பகுதியினரின் திறமை எதிராளியின்மீது செலுத்தப்படும் பொங்கிப் பெருகும் ஆக்ரோஷம் மற்றும் குரூரம் என்பன எதிரியின் சக்தியைவிட மிதமிஞ்சி இருப்பதிலேயே. இதன்படி கிளர்ச்சியின் தன்மை எதிர்மாறாக அதை ஒடுக்கும் தன்மையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

விஜேவீர கொல்லப்பட்டது, அவரைக் கைது செய்யப்பட்ட பின்பே. விஜேவீர மட்டுமல்ல அநேக ஜே.வி.பி. முன்னணித் தரப்பினர், கமநாயக்கா மற்றும் கீர்த்தி விஜயபாகு என்கிற புனைபெயரின் கீழ், எழுத்து மூலமான கட்டளைகளை வழங்கி வந்த சமன் பியசிறி போன்றவர்களும் கொல்லப்பட்டது அவர்களைக் கைது செய்த பிறகே. ஜே.வி.பி. தலைவர்களைப் பொறுத்தமட்டில் பாதுகாப்புப் படையினரால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கை, அமெரிக்கப் படைகள் பின் லேடனை கையாண்ட விதத்திலிருந்து மாறுபடும் ஒரே தன்மை என்னவெனில் படைகள் அவர்களைக் கைது செய்த பின்பு கொன்றார்கள் அதேவேளை பின் லேடன் கைது செய்யப்படாமல் கொல்லப்பட்டார் என்பது மட்டுமே. எந்த நாடும் பயங்கரவாதத்தை நசுக்குவதற்காகக் கடைப்பிடிக்கும் கொள்கையாக இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

பின்லேடன் மரணத்தின் பின் ஜனாதிபதி ஒபாமா நிகழ்த்திய வரலாற்றுப் புகழ்மிக்க உரையில் உறுதிப்படுத்தியது, தனது நாட்டைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அமெரிக்க மக்களின் உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகும்போது அவர்களைப் பாதுகாப்பதற்கு தனக்குள்ள உரிமையைப் பற்றியே. பின்லேடனைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா, பின்லேடனைப் பாதுகாத்து வந்த ஆப்கானிஸ்தானில் ஆட்சி மாற்றத்தைக் கூடச் செய்ய வேண்டி ஏற்பட்டது என்று கூட அவர் தனது பேச்சின்போது குறிப்பிட்டார். பின்லேடன் எழுப்பிய சவாலுக்கு பதிலளிக்க, அமெரிக்கா ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை மட்டும் வீழ்த்தவில்லை, அது ஈராக்கில் கூட ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக உருவான கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா ஆயிரக்கணக்கான மக்களை கொன்றது.

அமெரிக்காவுக்கு மட்டுமல்ல தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை

> **பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் இயக்கவியல்புகள் மற்றும் மரபுரீதியான யுத்த நடைமுறைகளும் முற்றிலும் வித்தியாசமானவை. அரசாங்கப் படையினருக்கு எதிராளியை அவர்கள் வெள்வேறு சமயங்களில் வெவ்வேறு பட்ட தோற்றங்களிலும் வடிவங்களிலும் தோன்றுவதால் அவர்களை இனங்காணுவது அத்தனை சுலபமல்ல. அவர்கள் சீருடைகளில் தோன்றும் வேளைகளைத் தவிர மற்ற நேரங் களில் சாதாரண பொதுமக்களின் உடைக ளிலேயே இருப்பார்கள்.**

ஏற்படுத்தும் பயங்கரவாத இயக்கங்களை தோல்வியுறச் செய்வதற்கு எல்லா நாடுகளுக்கும் உரிமை உண்டு. மிகச் சிறிய நாடான இலங்கைக்குக்கூட இதற்கு உரிமையுள்ளது. பின்லேடனின் பயங்கரவாதம் அமெரிக்காவில் சுமார் 3000



மக்களைத்தான் கொன்றது. ஆனால் பிரபாகரனின் பயங்கரவாதம் 50,000 இற்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றது.

புலிகள் பாரிய எண்ணிக்கையில் பௌத்த மற்றும் இஸ்லாமிய மத விசுவாசிகளை அவர்கள் விகாரைகளிலும் மசூதிகளிலும் வழிபாடுகள் நடத்திக் கொண்டிருந்த வேளைகளில் கொன்றொழித்தது. பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தின்போது கிழக்கு மாகாணத்தில் புலிகளிடம் சரணடைந்த சுமார் 400 வரையான காவல்துறையினரை புலிகள் கொடூரமாகக் கொலை செய்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களை புலிகள் வடக்கிலிருந்து வெளியேற்றி அவர்களின் உடமைகளையும் சூறையாடியது. அதேபோன்று, தங்களது அதே குறிக்கோளுக்காகப் போராட்டம் நடத்திய தமிழ் குழுக்ககளின் பெருமளவு



தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் ஈவு இரக்கமின்றிக் கொன்றது.

ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு வந்திருந்த தமிழ் தலைவர்களைக்கூட புலிகள் கொலை செய்துள்ளனர். ஈழத்துக்கு குறைவான எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ளப் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. அவர் இந்தியாவுக்கு ஒரு தற்கொலை குண்டுதாரியை ஏவி ராஜீவ் காந்தியை கொலை செய்வித்தார், ஈழத்துக்குக் குறைவான தீர்வினைக் காண்பதற்காக காந்தி மேற்கொண்ட சமரசத்துக்கு வஞ்சம் தீர்ப்பதற்காக. இப்படியாக பிரபாகரன் சட்டபூர்வமான இலங்கை அரசாங்கத்துக்கு ராட்சச அச்சுறுத்தல் களை எழுப்பி அதற்குச் சவால் விடுத்ததுடன், அதன் இருப்புக்கும் பயங்கரத் தடைகளை உண்டாக்கினார். பிரபாகரனின் புலிகள், உலகத்தில் எவ்விடத்திலாவது தோன்றிய பயங்கரவாதக் கருவினைக் கொண்ட தொகுதியைக் காட்டிலும் மிகக் கொடூரமானதும் மற்றும் நச்சுத் தன்மையானதுமாகும்.

அமெரிக்காவிலுள்ள அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்லாது இலங்கையில் உள்ளவர்களுக்கும் அத்தகைய தன்மை கொண்ட பயங்கர வாதக் குழுக்களை தோல்வியுறச் செய்யும் உரிமை உள்ளது. அளவிலும் ஆக்ரோசத்திலும் போட்டிபோடும் ஒரு பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்தத்தை நடத்தும்போது, மிகக் குறைந்த பூச்சிய அளவிலான மீறல்களை எந்த நாட்டினாலும் உறுதிப்படுத்த முடியாது. குறிப்பிட்டளவு அப்பாவி மக்கள் அதன்போது பலியா வது அதில் மேலும் தவிர்க்க முடியாதது. அது எத்தகைய போர்ச்சூழலிலும் இயற்கையானதும் மற்றும் தவிர்க்க முடியாத ஒன்றுமாகும். அல்கைதா இயக்கத்தை தோல்வியடையச் செய்வதில் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கும் பணம் மற்றும் மனித உயிர்களின் பெறுமானத்தோடு ஒப்பிடுகையில் இலங்கைக்கு ஏற்பட்டிருப்பது அதன் ஒரு சிறிய பின்னம் மாத்திரமே. அமெரிக்காவால் பின்லேடன் உட்பட ஒரு சிறிய எண்ணிக்கையிலான அல்கொய்தாத் தலைவர்களைக் கொல்ல முடிந்தாலும் கூட அதனால் முழு அல்கொய்தா இயக்கத்தினரையும் தோற்கடிக்க இயலவில்லை. இதற்கு மாறாக இலங்கையால் முழுப் புலிகள் இயக்கத்தையுமே தோற்கடிக்க முடிந்திருக்கிறது.

பின்லேடனைக் கொல்வதற்காக செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் விளைவாக அந்த வளவுக்குள் இருந்த எல்லோருமே கொல்லப்பட்டோ அல்லது காயம டைந்தோ இருக்கிறார்கள். மனிதக் கேடயமாகக் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண் கூடக் கொல்லப் பட்டுள்ளார்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். சிறைச்சாலைக்கு விரைவில் புதிய கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவரும் சிறைச்சாலையை நிரந்தரமான இடத்தில் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண சிறைச்சாலைக்கான புதிய கட்டிடம், யாழ்ப்பாண தொலைத்தொடர்பு நிலையத்திற்கு பின்பக்கமாகவும், பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுமாக பண்ணைப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிரந்தரக் கட்டிடம் அரசும் யு.என்.டி.பி நிறுவனமும் இணை ந்து 250 மில்லியன் ரூபா செலவில் அனைத்து வசதிகளும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் கட்டிடத்தில் 500 பெண் கைதிகள் உட்பட 2500 கைதிகள் வரை தங்கவைக்க முடியும். இந்தக் கட்டிடத்தொகுதியில் சிறை அலுவலர்களுக்கான விடுதி வசதியும் உள்ளடக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் வீட்டில் சிறைச்சாலை இயங்கிவருவதனால் பாரிய வசதியீனங்கள் காணப்படுவதுடன், சிறைக் கைதிகளைப் பராமரிப்பதிலும் அலுவலர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் தனியார் வீடொன்றில் சிறைச்சாலை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கா)

# கண்டாவளைக்கு அடிப்படைத் தேவைகள்

## கவனிப்பார் யாருமில்லை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, கண்டாவளை கிராம அலுவலர் பிரிவிலுள்ள 11 கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கிராம அலுவலர் பிரிவில் வெளிக்கண்டல், ஆவரஞ்சாட்டி, மடுக்கரை, கள்ளிப்பிட்டி, கூகைமாவடி, பலகைதுறை, செல்லவாரிப்பிட்டி, கோணங்குளம், பன்றிசுட்டான், பந்தர்மோட்டை, மானடித்தகுளம் உள்ளிட்ட கிராமங்களில் 370 வரையான குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளனர்.

இதில் 15 பெண்கள் யுத்தம் மற்றும் இடம்பெயர்வு காரணமாக குடும்பத்தலைவர்களை இழந்து விதவைகளாக உள்ளனர். அத்துடன் யுத்தத்தினால் 4 பேர் ஊனமுற்ற நிலையில் வாழந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு இன்னல்களைச் சந்தித்த இம்மக்கள் தற்போது மீள்குடியேறியுள்ள நிலையில் குடிநீர், தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் என்பன இல்லாது நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மக்களில் 60 வீதமானவர்கள் தறப்பாள்கள் மற்றும் ஓலைகளினால் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடிசைகளில் வாழ்ந்துவருவதாகவும், அத்துடன் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட இக்கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் அன்றாடத் தேவைகளை கால்நடையாகச் சென்றே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர முன்வரவேண்டும் என அக்கிராம மக்கள் கோர்ரிக்கை விடுக்கின்றனர். (110)

# மாந்தை கிழக்கு பிரதேச சபை சிறப்புற இடம்பெற்ற முதலாம் அமர்வு

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கான முதலாம் அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட புதிய பிரதேச சபை உறுப்பினர்களின் வரவேற்பு நிகழ்வும், முதலாம் அமர்வும் அன்றைய தினம் காலை 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் தெரிசெய்யப்பட்ட 5 உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிசெய்யப்பட்ட 6 உறுப்பினர்களும் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற முதலாம் அமர்வில் அரசாங்கக் கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட 3 உறுப்பினர்களும் பிரதேச சபையினால் புதிதாக அமைக்கப்பட்ட ஒட்டங்குளம் பொதுச்சந்தையை ஆரம்பிப்பது பற்றியும் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைப்பது பற்றியும் ஆராய்ந்ததுடன், இது தொடர்பாக தாம் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர் வினை அடுத்த அமர்வில் தெரிவிப்பதாக அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சு.சண்முகலிங்கம் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (110)

## புலிகளின்...

கனடாவுக்கு இக்கொள்கலன் அனுப்பப்படவிருந்ததாகவும் அது குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸார் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனேடிய முகவரியிடப்பட்ட புலிகளின் புத்தகங்கள் அடங்கிய 45 பெட்டிகள் காணப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளனார்.

## ஐ.நா.வில்...

கேள்விகளை எழுப்பியிருந்தது.

நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச, ஐ.நா. சபையில் அங்கத்துவம் கொண்ட நாடுகளின் பிரதிநிதி என்ற ரீதியில் நியூயோர்க்கில் நடைபெறும் இந்த பௌத்த நிகழ்வில் கலந்துகொள்ளவதாகவும், இந்நிகழ்வில் கலந்துகொள்வதில் பெருமை அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

## வடமாகாணத்திற்கு...

நிலையங்கள் ஊடாக நோயாளர் பரிசோதனை குடும்ப சுகாதார சேவை, வெளிநோயாளர் சிகிச்சை, தடுப்பு மருந்தேற்றல் போஷாக்கு மேம்பாட்டு நடவடிக்கை ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகள் வழங்கப்படும்.

நாட்டின் ஏனைய பகுதி மக்கள் பெறுகின்றன சகல சுகாதார சேவையையும் வடபகுதி மக்களுக்கும் சிறந்த முறையில் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான சகல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அவசரகாலச்....

செயலாளர் நிருபமா ராவ் ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்தே இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்ட பின்னர் அபிவிருத்தி, மீள்கட்டுமானம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான புரிந்துணர்வு சக்தி இலங்கைக்கு தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது என்று இரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள மேற்படி கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகளுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்தைகளின் போது வழங்கப்படும் வாக்குறுதிகள் துரிதமாக நிறைவேற்றப்படும் என்றும், உரிய நிபந்தனைகளின் அடிப்டையில் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக பகிர்ந்தளிப்பு திட்டங்கள் முன்வைக்கப்படும் என்றும் இலங்கை அரசின் சார்பில் ஜீ.எல்.பீரிஸ் கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கிழக்கு...

உதவியுடன் நீதிமன்ற முன் அனுமதி பெற்று அவ் அனுமதியின்படி பொலிஸார் மட்டுமே தேடுதல் நடத்த முடியும்.

ஆனால், இலங்கையில் முதலமைச்சர் ஒருவரின் வீடு சட்டத்திற்கு புறம்பான முறையில் நீதிமன்ற முன் அறிவித்தல் எதுவும் இல்லாமல் பொலிஸாரின் அனுமதியும் இல்லாமல் இராணுவத் தினரால் சுற்றிவளைக்கப்பட்டமை இதுவே முதல் தடவை ஆகும்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா மற்றும் அவரது உதவியாளர் ஒருவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

# அபிவிருத்தியை நோக்கிய பயணம்...



தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் காகித உறைத் தொழிலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தொழிற்துறை சார்ந்தோருடன் கலந்துரையாடினார்.



மீள்குடியேறிய மாதகல் பிரதேசத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் காசுக்கான வேலையினை ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் நேற்று ஆரம்பித்து வைத்தார்.



யாழ். மாவட்ட கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து அவர்களது நிரந்தர நியமனம் மற்றும் சம்பளக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.



யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் திறனாய்வு 2011 நேற்றுமுன்தினம் வித்தியாலய அதிபர் தேவ தாசன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு இணைப்பாளர் ரஜீவ் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கினார்.



கோண்டாவில் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பனை அபிவிருத்திச் சபையினால் கட்டி, வழங்கப்பட்ட பனம் வெல்ல உற்பத்தி நிலையத்தினை அமைச்சர் திறந்து வைக்கும்போது...



யாழ். மூளாய் சுரேஸ் கல்வி நிலையத்தின் 30 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்விலும் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கல்வி நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்ததுடன் அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

# புதிய மின் விளக்குகள்

நாட்டில் தற்போது பாவனையிலுள்ள மின் விளக்குகளை, புதிய LED (Light Emitting Diode) மின்விளக்குகளாக மாற்றப்படவுள்ளன. இதற்கான வேலைகளில் ஹாங்காங்கைத் தளமாகக் கொண்டுள்ள பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று செய்து கொடுக்கவுள்ளது.

Carbon Futures என்ற பெயருடைய இந்த நிறுவனத்தின் மனேஜிங் டைரக்டர் ஆன்டனி ஆர்மன், இரு பிரிட்டிஷ் நிபுணர்களைக் கொண்ட எமது குழுவொன்று இதுபற்றிய ஆய்வுகளைச் செய்து, ஏற்கனவே எமது முடிவை இலங்கை அரசுக்குத் தெரிவித்துவிட்டது என்றார்.

## யாழில் வெசாக்...

ஹத்துருசிங்கவின் ஏற்பாட்டில் யாழ். நகர மையப்பகுதியில் பண்டிகையினை முன்னிட்டு யாழ். மாவட்ட படைப் பிரிவுகளினால் புத்தபிரானின் கதைகளைக் கூறும் அலங்கார கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வெசாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு பார்வையிடும் சகல பொதுமக்களுக்கும் சிற்றுண்டி, தேநீர், குளிர்பானங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வெசாக் கொண்டாட்டங்களில் படையினர் ஈடுபட்டு வருவதைக் காண முடிவதுடன், தீவகப் பகுதியான நயினாதீவில் அமைந்துள்ள நாகவிகாரையினை நோக்கி தென்னிலங்கை மக்கள் ஏராளமானோர் வருகைதந்துள்ளதுடன், யாழ். குடாநாட்டு வெசாக் கொண்டாட்டங்களில் தென்னிலங்கை மக்கள் பெருமளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (27)

## நம்பிக்கை மிக்க...

பங்காளியாகவும், மாறாநிலை கொண்ட நண்பனாகவும் எதிர்பார்க்கின்றோம் என்றும் எஸ்.எம்.கிருஷ்ணா மேலும் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பின்போது அமைச்சர் பீரிஸ், நிபுணர்குழு அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈரானின் உதவித் திட்டங்கள் பாரம்பரிய நட்புறவுக்குப் பாலம்

## அமைச்சர் றிசாட் பதியுதீன் கூறுகின்றார்



(கொழும்பு)

ஈரானிலிருந்து இலங்கையின் அபிவிருத்திகளுக்காக கிடைக்கும் உதவிகளுக்காக நன்றி தெரிவிப்பதாக ஈரான் சென்றிருந்த கைத்தொழில் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீன் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அக்பர் சாலியுடனான சந்திப்பின்போது கூறியுள்ளார்.

ஈரான் சென்றிருந்த கைத்தொழில் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அக்பர் சாலிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை ஈரான் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது சீமெந்துத் தொழிற்சாலை அமைத்தல், இயந்திரங்கள் உருவாக்குதல் மற்றும் கட்டட நிர்மானம் போன்ற விடயங்களும் இரு நாட்டுத் தனியார் வியாபாரிகளை இணைக்கும் வகையில் வர்த்தக சம்மேளனம் உருவாக்குதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

ஈரான் வழங்கும் பாரிய உதவிகள் பாரம்பரிய நட்புறவுக்கு பலமாக அமையும் என அமைச்சர் றிசாட் குறிப்பிட்டார். இமாம் கொமெய்னி நிவாரண மன்றத்தினால், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு உதவிகளுக்கு அமைச்சர் றிசாட் பதியுதீன் நன்றி தெரிவித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் குறித்து ஈரான் வெளிவிவகார அமைச்சருக்கு அவர் விளக்கமளித்தார்.

இரு அமைச்சர்களுக்குமிடையிலான சந்திப்பின் போது இரு நாடுகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டது. இச்சந்திப்பில் அமைச்சருடன் ஈரானுக்கான இலங்கைத்தூதுவர் எம்.எம்சுஹைறும் கலந்துகொண்டார்.

# சிறைக் கைதிகள் சிலருக்கு விடுதலை

(யாழ்ப்பாணம்)

2600 ஆவது புத்த ஜயந்தியை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள சிறைகளிலிருந்து பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட நிலையில் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தன்டனை அனுபவித்து வந்த கைதிகளில் ஒன்பது பேர் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் சுற்று நிருபத்திற்கு அமைவாக சிறு குற்றம் புரிந்து நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டப் பணத்தைச் செலுத்த முடியாமல் சிறைவாசம் அனுபவித்தவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களாவார்.

22 வயதிற்கும், 65 வயதிற்கும் இடைப்பட்ட ஒன்பது ஆண்கள் நேற்று மதியம் யாழ்ப்பாணச் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க மற்றும சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அறிவுரை புகட்டப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட கைதிகள் சிறை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க உள்ளிட்ட சிறை அலுவலர்களுக்கு நன்றி கூறி, காத்திருந்த தமது உறவினர்களுடன் சென்றனர். (கா)

# கசிப்பு விற்றவருக்கு பொது மன்னிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றினால் நேற்று முன்தினம் மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர் நேற்றுக் காலை யாழ். சிறைச்சாலையில் விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்றார் எனத் தெரிவித்து கைதுசெய்யப்பட்ட நபரைக் கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். இந்த வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதிமன்ற பதில் நீத வான் மு.திருநாவுக்கரசு, குறித்த நபரை 15ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

எனினும் குறித்த பணத் தொகையைத் தன்னால் செலுத்த இயலாதென குற்றவாளி தெரிவிக்கவே, நீதவான் மூன்றுமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இதனையடுத்து அவர் நேற்று முன்தினம் சிறைச்சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றைய தினம் 2600 ஆவது புத்த ஜயந்தியை முன்னி[illegible] பொது மன்னிப்பளிக்கப்பட்ட கைதிகள் விடுதலை செய்யும் நிகழ்வில், யாழ்ப்பாணச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகளில் இவரும் ஒருவரென சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாகவே அவர் விடுதலை செய்யப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# படைத்தரப்பின் தேடுதல்கள்; மட்டக்களப்பில் தீவிரம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் இலங்கைப் படைத்தரப்பினரும், கொழும்பில் இருந்து சென்ற விசேட குற்றப்புலனாய்வுத் துறையினரும் இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே இத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் அச் செய்திகள் மேலும் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரபல வர்த்தகரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினருமான ஒருவரின் வீட்டிலும், அவரது திரையரங்குகளிலும் சிறிலங்கா படைத்தரப்பினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், களுவன்கேணி பகுதியில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களின் வீட்டிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் அண்மைக் காலத்தில் இரு கொலைகள் இடம்பெற்றிருந்ததோடு அங்கு மீண்டும் பதற்றநிலை உருவாகியிருந்தது.

இந் நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் கிருஸ்ணானந்த ராஜா நேற்று மாலை கொழும்பில் இருந்து சென்ற இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரிலேயே பிரதீப் மாஸ்டர் கைதுசெய்யபட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்த ஜயந்தி தினத்தில் மாடு வெட்டியவர்கள் கைது

யாழ். கைதடி வடக்கு பகுதியில் வெசாக் தினமான நேற்று மாடு அறுத்ததாகத் தெரிவிக்கப்படும் 6 பேர் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் கைதடி வடக்கு, பகுதியிலுள்ள பற்றையொன்றினுள் வைத்து சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான காளைமாட்டை திருடி இறைச்சிக்காக அறுப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்த த[illegible]லையடுத்து, இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர். இதேவேளை, வேறொரு இடத்தில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாடு அறுத்த [illegible]ால் வரும் கண்ணி வைத்துகொக்குகளைப் பிடித்து கொலைசெய்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மகிந்த ஆட்சியில் புத்துயிர் பெறும் கல்வி

## அமைச்சர் டக்ளஸ் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழான தற்போதைய ஆட்சியில் யாழ் மாவட்டத்தில் கல்விநிலை மீண்டும் புத்துயிர் பெற்றுவருவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

யாழ் பொதுநூலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற இந்தியக் கல்விக் கண்காட்சி நிகழ்வின் ஆரம்பநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இடம்பெறும் இந்தக் கல்விக் கண்காட்சியை ஏற்பாடு செய்தவர்களின் முயற்சியானது வரவேற்கத்தக்கது என்பதுடன் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் கல்வியில் மிக உயர்ந்த நிலையில் இருந்து வந்தபோதிலும் அதன்பின்னர் யுத்த சூழலால் கல்வித்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

ஆனால் தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ அவர்களின் தலைமையின் கீழான ஆட்சியின் கீழ் இம்மாவட்ட மாணவர்கள் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிவருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

முன்பதாக பிரதம மற்றும் ஏனைய விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து கல்விக் கண்காட்சி மண்டபத்தினை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

மண்டபத்தில் இந்தியத் துணைத்தூதுவர் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் உரையாற்றும் போது, யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக இடம்பெறும் இக்கல்விக் கண்காட்சியானது எமது மாணவர்களுக்கு மிகவும் அவசியமானது என்பதுடன் உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களின் அடுத்தகட்ட வாழ்வுக்கான வழிகாட்டியாக இது போன்ற கண்காட்சிகள் அமைகின்றன.

இதன்மூலம் இங்குள்ள மாணவர்கள் இந்தியாவிற்குச் சென்று கல்வி கற்பதற்கேற்ப சாதகமானதொரு நிலை தோன்றியுள்ளதுடன் இந்திய கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் அலுவலகமொன்றை நிறுவி உயர்கல்வி தொடர்பிலும் அவை சார்ந்த தொழில் வாய்ப்புகள் தொடர்பிலும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து இந்தியாவின் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களின் கற்றல் நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏனைய விளக்கங்களையும் அதிதிகள் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

# மரண அறிவித்தல்

## துஷாந்தி கனகசபை (B.A)



ஈச்சமோட்டை பீச் றோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவுங்கொண்ட செல்வி துஷாந்தி கனகசபை (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா கனகசபை (றீகல் வீடியோ உரிமையாளர்) பங்கஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

42/7, ஈச்சமோட்டை,
பீச்றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்
ராஜ்குமார், பிரசாந்தன்
(சகோதரர்கள்)

(119)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.